உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905ஆ பிப்பிரவரிமீ { புத்தகம் 2

சீனதேசத்துப் பெரிய சுவர்.

[THE GREAT WALL OF CHINA.]

சீன நம் ஆசியாகண்டத்திலுள்ள ஒரு பெரிய இராஜ்யம். இவ்விராஜ்யம் முழுவதும் நம் பரதகண்டத்தினும் மூன்று பங்கு விஸ்தீரணமுள்ளது. சேர்ந்த தேசங்களை நீக்கிச் சீனவை மட்டும் பார்ப்போமானால் நம் பரதகண்டத்தின் அளவே யிருக்கிறது. ஆனால் இதன்ஜனத்தொகை நம்தேசத்தினும் 8-கோடி அதிகம். ஐரோப்பா கண்டத்தின் ஜனத்தொகையினும் சீன தேசத்தின் ஜனத்தொகை அதிகமென்றால் இதன் மாண்பைக் கூறலும் வேண்டுமோ. இத்தேசம் நீர் வளத்தாலும் நிலவளத்தாலும் சிறப்புற்றது. இதுவே இஜ்ஜன நெருக்கத்துக்குக் காரணம். நம் நாட்டைப்போல் இத் தேசமும் தொன்றுதொட்டு நாகரிகத்திலும் செல்வத்திலும் சிறப்புற்றது. இதன் முன்பக்கத்திற்காணும் படம் இத்தேசத்து அற்புதச் சுவரின் காக்ஷி. இது பூர்வீகரின் உழைப்புக்கும் ஊக்கத்துக்கும் அத்தாக்ஷியாய் இருக்கிறது. இவ் வுலகின்கண்ணுள்ள பேராதிசயங்களில் இதுவும் ஒன்றும். சீன தேசத்தாருக்கும் தார்த்தாரி தேசத்தாருக்கும் ஓயாச் சண்டை நெடுங்காலம் நடந்து வந்தது. பலமுறை துரத்தப்பட்டும் தார்த்தாரி ஜாதியார்கள் சீனர்களை விடாமல் தாக்கிக் கொள்ளையிட்டு வந்தார்கள். அவரது கொடுமையைக் குலைக்கவே இச் சுவரை எழுப்பினர்கள். இப்பெருந் தொழிலை முதல் முதல் நினைந்தவர் அத்தேச

த்துச் சக்கரவர்த்தியாகிய ஷிஹ்வான்ங்டி என்பவர் ஷாங்காய்தொடங்கி இச்சுவர் 1225-மைல் நீளம் வியாபித்திருக்கிறது. வளைவுகளையும் சேர்த்துக் கணக்கிடின் 1500-மைலாகும். அடிவாரத்தில் இதன் அகலம் 25-அடி, உச்சியில் 15-அடி. இதன் உயரம் 15-அடி முதல் 30-அடி வரை பலவிடங்களில் வேறுபட்டிருக்கும். இது மலைகளின் பக்கத்திற் செல்வதே இவ் வித்தியாசத்திற்குக் காரணம். இது முழுமையும் கெட்டிச் சுவரன்று. இருபுறமும் சுவர் எழுப்பி நடுவில் கல்லும் மண்ணும் போட்டு நிரப்பப் பெற்றது. இருந்தாலும் இதன் வன்மை மிக வியக்கத்தக்கது.

இதைத் தொடங்கியவர் இதனை முடியக்கட்டிப் பார்க்கவில்லை. அவருக்குப் பிற்காலத்திலேயே அது முடிவு பெற்றது. இது கட்டி 2118 வருஷமாகிறது. இப்பெருஞ் சுவரில் 40 அடிக்கு ஒரு முறை ஒரு கோபுர வீதம் பல கோபுரங்களிருக்கின்றன. இவை சத்துரு உட்புக வொட்டாமல் தடுக்கும் ரக்ஷண ஸ்தானங்கள். இக்காலத்தில் இந்நெடுஞ் சுவர் சிறிதும் பயன் படாவிடினும் ஒரு காலத்தில் மிகப்பயன் பட்டு வந்தது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இத்துணை அபார வேலையில் செலவாயிருக்கும் உழைப்பையும் பொருளையும் பற்றி இதனை வாசிப்பவரே ஊகித்தறிந்து கொள்ளலாம். தற்காலம் இச்சுவர் மீது புல்மண்டிக் காடாகக் கிடக்கிறது.

இதனை ஓர் அதிசயக் காக்ஷியாகப் பலர் போய்ப் பார்த்து வருகிறார்கள். 1887-ம் வருஷத்தில்கூட ஐரோப்பிய பத்திரிகைகளெல்லாம் இச்சுவரைப் பற்றிய விவரங்கள் கட்டுக்கதை யென்று கூறிற்றும். இவ்வளவு தூரம் உலகத்தாரை பிரமிக்கச் செய்யும் இச்சுவரைப் பற்றி நாம் அறிய வேண்டியது இன்றியமையாததன்றோ? நம் நாட்டார் இவ்விதச் சங்கடமடைந்து வீண் உழைப்புக்கும் செலவுக்கும் உள்ளாகாமல் தயாபரராகிய பகவான் நம் நாட்டின் மீது கருணை கூர்ந்து எவருங் கடத்தற்கரிய இமயகிரியை நம் வட எல்லையாகப் படைத்திருப்பது நம் பெரும் பாக்கியமன்றோ.

அற்பனான மானுடன் எத்தனை சாமர்த்தியமாக வேலை செய்தாலும் பகவத் சிருஷ்டிக்குச்சிறிதும் ஈடாகுமா? ஆகாதே. மனிதன் வேலையின் நிலைமை தினே தினே மாறும். பகவத் சிருஷ்டியோ என்றைக்கும் ஒரே விதமான சிறப்பு வாய்ந்தது என்ற உண்மையை நாம் இதனால் அறிந்து கொள்ளலாம். பகவத் சிருஷ்டியின் அற்புதக் காக்ஷிக்கு எதுதான் ஈடாகும்?. அவர் சர்வ சக்தரன்றோ?.

பத்திராதிபர்.

ஜகத்ஜோதி.

[முன் தொடர்ச்சி]

ஷியர் ஆப்கன் ஆபத்தினின்றும் நீங்கிய சங்கதி ஊரெங்கும் பரவிற்று. அவன் சாமர்த்தியத்தையும் புத்தி நுட்பத்தையும் புகழாதார் ஒருவருமில்லை. எங்குச் சென்றாலும் அவனைப் பற்றியே ஜனங்கள் பேசிப் புகழ்ந்து வந்தார்கள். அவன் தெருவில் போகும்பொழுதெல்லாம் பெருங்கூட்டம் அவனைப் பின் தொடர்ந்து அவன் பலத்தையும் வீரத்தையும் பற்றி வியந்து பேசுவது வழக்கமா யிருந்தது. தாய்மாரும் தங்கள் குழந்தைகளைத் தாங்கிநின்று நம் ஷியர் ஆப்கனைச்சுட்டி அவன் கதை கூறி அவர்களை உற்சாகப் படுத்துவார்கள். நாடெங்கும் அவன் புகழ் பரவலாயிற்று. அவன் பெயர் வீரத்துக்குப் பழமொழியாக வழங்கி வந்தது. இவ்வாறிருந்தும் ஷியர் ஆப்கன் மட்டும் மனக்கவலை கொண்டிருந்தான். சக்கரவர்த்தி இழைத்த தீங்கை நினைந்து அவன் மனம் புண்ணாகப் போய் விட்டது. மனிதர்களின் தீக்குணத்தைப் பற்றி அவன் பல வாறு துக்கித்தான். ஜீவ சிருஷ்டியில் எல்லாரும் சகோதர பாவத்துடன் இருத்தல் வேண்டுமென்பது அவன் எண்ணம். இதற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது இவ்வுலகம். அய ல்வாழ்வு சகியாதவர்கள் மத்தியில் நாம் ஜீவித்துக் காலங்

கழிக்க வேண்டி யிருக்கிறதே. பொருமைப் பேய் பிடித்துப் பலர் பற்பல தீச்செயல்கள் புரிகின்ருர்கள். அவரவர் விதிப் படி உயர்வும் தாழ்வும் ஒருவருக்கு உண்டாவது இயல்பு. அவ் வாறு உயர் வுண்டாகும் காலத்தில் சந்தோஷித்தும் தாழ்வுண் டாகும் காலத்தில் நாம் அவர்களிடம் அநுதாபம் காட்டியும் அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றி வருவோமாஞல் இரு வருக்கும் நலமாக விருக்கும். அவ்வாறின்றிப் பொருமைக் குணமே குடிகொண்டு மனிதர்கள் தங்கள் சுகத்தை வீணில் இழந்து விடுகின்றனர். இம்மாதிரி மனிதர்களுக்கு நடுவே இருப்பதினும் தனியே வாழ்தல் நலமெனக் கருதி ஷியர் ஆப் கன் மறுபடியும் பர்ட்வான் தேசம் சென்ருன். மிகவும் தூர தேசத்தில் இருப்பதால் சக்கரவர்த்தி தன்னை நினைக்க இட மிராதென்று அவன் நினைந்தான். தீக்குணம் ஒருவரைப் பல மாய்ப் பற்றியிருக்கும் பொழுது எளிதில் நீங்குமா? சக்கர வர்த்தியின் மனம் ஏக்கங் கொண்டது. எவ்விதத்திலாவது ஷியர் ஆப்கனது முடிவைத் தேட வேண்டுமென்ற எண்ணம் அவர்மனத்தைப் பலமாய்ப்பற்றிக்கொண்டது. மறுபடியும் அவர் வங்காள அதிகாரிக்கு இரகசியமாய் எழுதினர். ஒத்துக்கு மத்தளம் சேர்ந்தாற்போல் அவனும் மனமகிழ்ந்து தன் யஜ மானன் காரியத்தைச்சீக்கிரம் எவ்விதமாகவாவது முடிப்ப தாகத்தெரிவித்தான். எல்லாம் பரம இரகசியமாய் நடந்து வந்தது. ஷியர்ஆப்கன் யாதொன்றையும் அறியான். எப்பொழு தும் தீங்கில்லாத பரிசுத்தமான அவன்மனம் ஆநந்தம் அநுப வித்தவண்ணமாகவே இருந்துவந்தது. இவ்வாறிருக்கையில் வங் காள அதிபதி பெரும் பரிவாரங்களுடன் பர்ட்வானை நோக்கி வந்தான். தேசக்ஷேமத்தை நாடுபவன்போல் நாடெங்கும் சுற் றிப்பார்ப்பதற்குப் பிரயாணம் புறப்பட்டதாக வெளி வேஷம் போட்டுவந்தான். பெரிய அதிகாரிகள் அவ்வாறு பிரயாணம் செய்து குடிகளின் குறைகளை ஆங்காங்கு விசாரித்துத் தக்க பரிகாரம் செய்து வந்தால் நாட்டுக்கு நலமே. ஆனல் அவ் வாறு செய்வதாகப் பாசாங்கு மட்டும் பண்ணிக்கொண்டு பலர் நடிப்பது வழக்கம். இவர்கள் சுயகாரியப் புலிகள். இப்படிப்

பட்டவர்களால் குடிகளுக்குத் தீங்கே ஒழிய சிறிதும் நன்மை யுண்டாகாது. இவ்வாறான சுயகாரியப் புலிகளில் ஒருவன் வங்காள அதிகாரி. இராஜப் பிரதிநிதி தேச சஞ்சாரம் பண்ணுகையில் அரசர்க்குரிய மரியாதையை ஜனங்கள் செய்வது இயல்பு. அவ்விதமே நம் ஷியர் ஆப்கனும் தன் நாட்டு அதிபதி வருங்கால் எதிர்சென் றழைத்து தன் அந்தஸ்துக்குத் தக்க வண்ணம் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்தான். அவ்வதிகாரியும் ஷியர் ஆப்கனிடம் மிக்க அன்பு பாராட்டுபவன் போல் நடித்து உபசாரங்கள் செய்து அவனை யேற்றதுமன்றி தன் பக்கலிலேயே அவன் வரும்படி செய்து அவனுடன் மனங் கலந்த மித்திரனுடன் அளவளாவும் விதம் அளவளாவி வந்தனன். அவன் வீர தீரத்தைப் பற்றித் தான் கேள்விப் பட்டதையும் சக்கரவர்த்தி தனக்குத் தெரியப்படுத்தினதையும் பலமுறை கூறிச் சந்தோஷித்தான். ஷியர் ஆப்கனும் யாதொரு சந்தேகமின்றி உறவாடி வந்தனன். இருவருக்கும் சிநேக சம்பந்தம் அதிகப்படவே ஷீயர் ஆப்கன் அவ்வதிகாரியை விருந்துக்கழைத்தான். "நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ, அல்லோர் வரவா லழுங்குவார்" என்ற வண்ணம் அதிபதியின் நலவரவு கொண்டாடிக் குதூகுல மடைந்தனன் நம் ஷியர் ஆப்கன். இராஜாங்கத்தைச் சேர்ந்த மற்றைப் பிரபுக்களையும் விருந்துக் கழைத்தான். அவன் இல்லாளும் இது விஷயத்தில் மிக்க மகிழ்ச்சி யடைந்தவளாய் அச் சமயத்தைச் சிறப்பிக்கவேண்டிய ஏற்பாடுகளை எவரும் கொண்டாடும் வண்ணம் சீரும் சிறப்புமாய்ச் செய்து வந்தனள். இல்லாளின் நற் குணங்களில் இவ் விருந்தோம்பலே சிறப்புற்றது. இதனால் இல்வாழ்வோனுக்கு உண்டாகும் ஆநந்தமே ஆநந்தம். முகந்திரிந்து நோக்கின் விருந்து குழையு மாதலால் இத் துர்க்குணங்களைநீக்கி முகமலர்ச்சியுடனும் அகமகிழ்வுடனும் இயல்வதை இட்டு உபசரிப்பது இல்லாளின் கடமை.

"ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலு முண்பதே அமிர்தமாகும்"

என்ற கவிக்கூற்றுக் கிணங்க விருந்தினரை உபசரித்தல் பெரும் பாக்கியத்துக் கிடமாம். வந்த விருந்தை யுபசரித்த வேடன் அடுத்த ஜன்மம் அரச குமாரனாகப் பிறந்ததும் அவன் துர்க்குணமுள்ள மனைவி அதே காலத்தில் பன்றிக் குட்டியாகப் பிறந்ததும் பிரசித்த மன்றோ? ஆகையால் விருந்தோம்பலை விசேஷ குணமாக மதிக்க வேண்டியது ஒவ்வொரு இல்லறக் கிழத்தியின் கடமையாம். அதனால் குடும்ப க்ஷேமமும் ஐசுவரியமும் அபிவிருத்தி யடைந்து குடும்பம் தழைத்தோங்கிச் சிறப்புறும். துரோபதை துர்வாச மகரிஷிக்கு விருந்திட்டதையும், இளையான்குடி மாறநாயனாரின் மனைவி அடியார்க்கு விருந்திட்டுச் சிறப்புற்ற சரிதையையும் எவரும் நாடோறும் நினைந்து நடத்தல் வேண்டும்.

இவ்வாறான விருந்தோம்பலின் உத்தம குணத்தை அறிந்த நம் ஜகத்ஜோதி ஷியர் ஆப்கன் மனத்தை மகிழ்க்கவும் தன் இல்லற தர்மத்தைச் சிறப்புவிக்கவும் எல்லாவித ஏற்பாடுகளையும் சீரும் சிறப்புமாய்ச் செய்திருந்தனள். இவ்வித சமயத்தில் கணவன் மனத்தைக் களிக்கச் செய்பவளே கணவனுக்கு இன்னுயிர்த் துணைவி யாவாள். அவ்வாறின்றி முகங் கடுப்பவளே அவன் கழுத்துக்குக் கத்தியாவாள். இதனாலன்றோ நம் பெண்ணரசி யாகிய ஔவையாரும்

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக விருப்பளே யாமாகில்
கூறாமற் சந்நியாசங் கொள்." என்றனர்.

ஆகையால் புருஷன் மனோபாவத்தை அநுசரித்து அவன் மனம் மகிழ நடப்பவளே இல்லறத் துணைவியாவாள். இஃது அறநூலில் கூறப்பட்ட விஷயம். இவ்வித தருமங்களைக் கைக்கொண்டு நம் ஜகத்ஜோதி எல்லாம் இனிதாக ஏற்பாடு செய்திருந்தனள். ஷியர் ஆப்கனும் விருந்தினரை அழைத்து வந்து தன்னாலியன்ற உபசாரணை செய்து உண்பித்தான். யாதொரு

குறைவுமின்றி எல்லாம் சம்பிரமமாய் நடந்தன. நெடுநேரம் தேச க்ஷேமங்களைப் பற்றியும் உலகத்தில் நடக்கும் அநியாயங்களைப்பற்றியும் மிக்க மன இரக்கம் பாராட்டிப் பேசுபவன் போல் பேசிக்கொண்டிருந்தான் பங்காள அதிபதி. "வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர்" என்று மனமுவந்து கேட்டுக்கொண்டிருந்தான் நம் ஷியர் ஆப்கனும். உண்டாட்டுக் களியாட்டமும் ஒரு விதமாய் ஒழிந்தன. எல்லோரும் தத்தமிருப்பிடத்துக்குச் செல்லப் புறப்பட்டனர். நம் ஷியர்ஆப்கனும தன் நண்பர்களை வழியனுப்பும் வண்ணம் இராஜாங்க கோலத்துடன் புறப்பட்டனன். சிறிது தூரம் செல்லவே ஒரு காவலாளி திடீரென்று ஷியர் ஆப்கன் குதிரையைத் தடுத்து அதனைப் பலமாய் அடித்தனன். அதுவரை யாதொரு தீங்கையும் எண்ணாத ஷியர் ஆப்கனுக்கு அது ஒரு பெரு வியப்பாயிருந்தது. திடீரென்று இவ்விதம் ஒரு காவலாளி துணிந்து செய்யும் செய்கையை ஆராயுங்கால் ஏதோ மோசமிருக்கிறது. முன்னமேயே சதியாலோசனை இன்றி இவ்வாறு ஒரு காவலாளன் துணிந்து எதிர் வரமாட்டான். ஆகையால் இனி சும்மா இருப்பதிற் பயனில்லை என்று தன்னுள் ஆலோசித்து உடைவாளை உடனே உருவி அக் காவல்லாளனை அதற்கு இரையாக்கினன்.

உடனே பவனி போய்க்கொண்டிருந்த காவலாளிகள் அனைவரும் அவனைச்சுற்றிப் பலாப்பழத்தை ஈ மொய்க்கும் விதம் மொய்க்க ஆரம்பித்தனர். 'ஆயிரங் காக்கைக்கோர் கல்' என்ற வண்ணம் ஷியர் ஆப்கனும் வரவர அவர்களைக் கத்திக் கிரையாக்கினன். அம் மகா சூரன்முன் எவர் நிற்க முடியும்?. சிங்கமும புலியும் பட்டபாட்டில் இவர்கள் அவனுக்கு எம்மட்டு? பல பேர் மடிந்தனர். அநேகர் உயிர்தப்பி ஓடிப் பிழைக்கலானார்கள். அணுகிச் சண்டைசெய்தல் அபாயத்துக் கிடமாயிருப்பதை உணர்ந்த பலர் சிறிது தூரத்தில் நின்றுகொண்டு அம்பு மாரி பொழியத் தொடங்கினர். சிலர் துப்பாக்கியை உபயோகிக்க லானார்கள். நாலா பக்கங்களி லிருந்தும் அம்புகளும் குண்டுகளும் மாரிபோற் பொழியவே ஷியர் ஆப்கன் என் செய்

வான்? சூரனான அபிமன்யூ பாரத யுத்தத்தில் பட்டபாட்டைத் தவிர்த்து வேறெதுவும் இதற்கு உபமான மாகாது. அபாயத்தைக் கண்கூடாகக் கண்டவுடன் ஷியர் ஆப்கன் "இனி நாம் தப்பப்போகிறதில்லை. ரணகளத்தில் தீரமாய்ச் சண்டைசெய்து செத்தால் வீரச்சுவர்க்கமுண்டு. முன்வைத்த காலைப் பின்வைக்காமல் யுத்தஞ்செயவதே மேன்மை" என்று யுத்தஞ்செய்யத் தீர்மானித்தான். சத்துருக்களைத் தூரத்தித்தூரத்தி எதிர்ப்பட்டவர்களை ஒரே வீச்சாக வீசிக்கொண்டு செல்லவே உச்சைச்ரவத்துக்குச்சமானமான அவனது நீலவேணிக் குதிரை தலையில் ஒரு குண்டுபட்டு அவன்காலின்கீழ் மடிந்தது. ஷியர் ஆப்கனும் இனித் தனக்கு முடிவு என்றுதெரிந்து சமீபித்துவிட்டது பக்திமானானபடியால் மேற்குமுகமாய் மக்காவை நோக்கி மண்டியிட்டுத் தொழத் தொடங்கினான். தொழுவதற்குமுன் சுத்தம்செய்துகொள்ள நீர் அங்கில்லாமையால் அதற்குப்பிரதி புழுதியை எடுத்து முகத்தையும் கைகால்களையும் சுத்தி செய்துகொண்டு பகவத் தியானம் பண்ணினான். அந்தியகாலத்தில் இம்மாதிரியான எண்ணம் உண்டாகிறதென்றால் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்கவேண்டும். புண்ணிய புருஷர்களுக்கே அவ்வெண்ணம் தோன்றும். ஷியர் ஆப்கன் மனம் என்றைக்கும் நிர்மலமானதாலும் பக்தி நிறைந்ததானதாலும் அவனுக்கு அவ்வாபத்துக்காலத்தில் அவ்வாறான எண்ணம் உதித்தது.

முன்னோர் அரசன் சூரியாஸ்தமனத்துக்கு முன் சந்தியாவந்தனஞ் செய்ய நீரகப்படாமையால் காலம் தப்பக் கூடாதென்று புழுதியை எடுத்து அர்க்கியம் கொடுத்த வண்ணம் ஷியர் ஆப்கனும் இச்சமயம் புழுதியை நீராக உபயோகித்துக்கொண்டான். சடிதியில் அவன் தியானத்தைவிட்டெழுந்து சிங்கம்போல் ஆர்ப்பரித்து நிற்கவே எவரும் நடுநடுங்கினார்கள் ஒருவரும் இவனை அணுகத் துணியவில்லை. தூரத்திலிருந்த வண்ணமே சரமாரியும் குண்டுமாரியும் பொழிந்தனர்.

[இன்னும் வரும்.]

எஸ். சாமிநாதையர்.

தேனும் தேனீயும்.

[முன்தொடர்ச்சி.]

XIII. விவாக முறை.

"காணாமல் இன்புறுதல்" காக்கைக் குணமென்ப. பெண் ஈயாகிய இராணி ஈயும் பிற ஈக்கள் காணக் கூட்டிலேயே ஆண் ஈ யுடன் சேராது. பின்னை, அது கர்ப்பந்தரிக்குமாறு வேனிற் காலத்தில், வெயில் அழகாய்க் காய்ந்து கொண்டிருக்கும் வேளையில் பெருங்காற்றடியா நேரம் பார்த்துக் கூட்டினின்றும் ஆணீக்களோடு வெளிக்கிளம்பி ஆகாயத்தில் பறந்தெழுந்து மூன்று மணி நேரத்திற்குள் கூடு திரும்பும். அது திரும்பு மட்டும் ஈக்களுக்கு மனச்சமாதானமே இராது. இச்சமயம் கூட்டண்டை போவோர் கொட்டுண்டே வருந்துவர். அவை இதன் பிரிவாற்றாதும் இராணி ஈக்கு பிற கூட்டீக்களாலும் கால நிலையானும் சம்பவிக்கக்கூடிய விபத்துக்களை நினைந்தும் சஞ்சலப்பட்டு அதி துக்கப்பேரிரைச்சலெழுப்பிக்கொண்டிருக்கும். சென்ற இராணி சுகமாய்க் காரிய சித்தி பெற்றுத் திரும்பிவிட்டாலோ பேரானந்தம் கொண்டு அவை உங்கரிக்கும். அது காரிய சித்தி பெற்றதும் பெறாததும் பார்த்தமாத்திரத்திலேயே சிற்றீக்கள் அறியும். எங்ஙனமெனில் அது கருத்தரித்திருப்பின் ஆணீயின் ஜீவாதார பாகம் அதன் புறத்தில் பொருந்தியிருக்க அவைகாணும். காரிய சித்தி பெறாவிடின் பிரதிதினமும் அதுபெறும் மட்டும் ஆகாயத்தில் ஆணீயுடன் பறந்தெழவேண்டியதுதான். ஈக்கள் கருத்தரித்துத் தமது இராணி வந்துவிட்டதெனக் கண்டுவிட்டால் அவைகள் தலைகால் தெரியாதபடி சந்தோஷங்கொண்டு அதன் வரவை சகல மரியாதையுடனுமேற்று அதனைக் கட்டித் தழுவிச் சூழ்ந்து கொள்ளும். அது செல்லுமிடந்தோறும் அதற்கு எல்லாக் காரியங்களிலும் துணை நின்று உதவ அது 20 ஈக்களுக்குக் குறையாமல் பரிஜனமாய்ப் பெறுமாம். காரியசித்தி பெற்ற இராணி ஈக்கு நடக்கும் மரியாதையில் காற்பங்கு கூட கருத்தரியா இராணிக்கு நடவாது. அன்றியும், சிற்றீக்கள் அதனை அதிகமாய் அசட்டை செய்யும். நிற்க.

இது ஆண்ஈயுடன் சேர்ந்தஇரண்டுமூன்று தினங்களுக்கெல்லாம் முன்பு நாம் கூறியபடி காலநிலைக்கேற்ப முட்டையிட ஆரம்பிக்கும். இது தன்இஷ்டப்படி முட்டைகள் ஆண் ஈக்களாகவும் பெண்ஈக்களாகவும்இடக்கூடுமாம். இடுமுன் அது தனது தும்பிகளைக்கொண்டு அறையானது காலியாகவும் மெருகிட்டுச் சுத்தமாகவும் இருக்கிறதா எனப்பார்த்தறியும். அது காய்ந்து

கருகி அழிய கூட்டின் வெளிப்புறத்திருந்து தரையில் முட்டையிட்டாலும் இடுமேயன்றி காலியாகவும் சுத்தமாகவும் இல்லாத அறையில் இடாது. பரிக்ஷார்த்தமாய் மேற்றிசையோர் ஒருவர் கருத்தரித்த ஓர் இராணி ஈயின் தும்பியை நறுக்கிவிட்டதால் பாவம்! அது கூட்டைவிட்டு ஓட நேர்ந்ததெனத் தெரிய வருகிறது. ஏனெனில், ஸ்பரிசிக்கும் தும்பியை இழந்துவிட்டதால் கூடுசுத்தமாய் இருந்தும் கூட்டைப்பற்றி எதுவும் அதுதெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஆதலின் அதுகூட்டிற்கு வெளிப்புறம்வந்து தரையிலேயேமுட்டைகளை யிட்டதாம். பின்னர் சந்ததி அபிவிருத்தியின்மையைக்கண்டுகொண்ட சிற்றீக்களின்சொட்டுக்கஞ்சி அதுதன்வேலையைத் தானே ராஜிநாமாசெய்துபோட்டு பனியினலோ குளிரினலோ எதிரியினலோ செத்ததாம்.

ஆண் ஈக்களுடன் சம்பந்தப்படாமலும் பெண் ஈக்கள் கருத்தரித்து முட்டையிடக் கூடும் என்று சொல்லுகிருர்கள்.

XIV தேனீ கூடுகட்டு மிடங்கள்.

இதுகாறும் மூவகை ஈக்களைப் பற்றியும் சில தெரிந்துகொண்டோம் இனி தேனீக்கள் கூடுகட்டு மிடங்களைப்பற்றிக் கூறுவம். காட்டு ஈக்கள் சாதாரணமாய் மலைப்பிளவுகளிலும் மரப்பொந்துகளிலும் கூடு கட்டுகின்றன. தவிரவும், நமது முன்னேர்கள் அவை சூரைச் செடிப்புதரிலும், அகப்பட்டாரை அறைந்து கொல்லும் பார்ப்பனப்பேய் வாழும் இடுகாட்டிலுள்ள புற்றுகளிலும் கருக்கு வாய்ந்து வானுற வோங்கி வளம்பெற வளரும் மடற்பனை மரத்தின் மீதும் தேனை வைக்கிறது என்று கூறியிருப்பதுடன் இவ்விடங்களில் உள்ள தேனை லோபிகளின் திரவியத்திற்கு ஒப்பிட்டும் இருக்கிருர்கள். மேற்சொல்லியவற்றின் உண்மையை

"சுற்றும் கருங்குளவி சூரைத்தூறு, ஆரியப்பேய்
எற்றும் சுடுகாடுஇடிகரையின்—புற்றில்,
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க் கொன்றீயாத் தனம்." என்னும்

வெண்பாவால் அறிக. என் இவை இங்ஙனம் அதி உன்னதமாயும் கொள்வதற்கரிதாயும் உள்ள இடங்களில் கூடுகட்டுகிறதெனில், சுயநயம் பாராட்டும் மனிதன், தமது சொத்தைக்கொள்ளையடிப்பதோடு நில்லாமல் தம்மையும் நாசப்படுத்துவன் என்றபயத்தினலேயே. ஆயினும் இவற்றின் எண்ணமெல்லாம் வீண் எண்ணமே. ஏனெனில் எந்த இடத்தில் இவை கட்டினலும் என்ன? மனிதனுக்குத் தேன் பெறுவது அசாத்தியமான காரியமா?

XV. தேன் பெறுமாறு.

கூட்டினின்றும் தேன் கொள்ளல்:— வெகு தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அவ்வளவு பெரிதாய்ச் சில கூடுகள் இருக்கும். இத் தேன் கூடுகள் தெரிந்தமாத்திரத்திலேயே மனிதன் தீவர்த்தியும் கையுமாய் நீண்ட கயிற்றுச் சுருள் ஒன்றையு மெடுத்துக்கொண்டு உயர ஏறிப் புகை போட்டு ஈக்களைத் துரத்துவன். அப்பொழுது தீவர்த்திப் புகையால் மூச்சுவிட மாட்டாமல் ஸ்மரணையழிந்து விழும் சில ஈக்கள். உயிர் தப்பி ஓடும் வேறு சில. பொசுங்கிச் சாகும் பல ஈக்கள். எத்தனை ஈக்கள் செத்தால் தான் இவனுக்கென்ன? ஈக்கள் பாடு இவ்விதமாகவே இவன் தேன் கூட்டை அடியோடு பெயர்த்தெடுத்துக் கயிறு கட்டிக் கீழே இறக்குவன். பின்பு அதில் உள்ள தேன் ஒட்ட வடித்து எடுக்கப்படும். ஆ! ஆ!! என்ன பரிதாபம்!

பல பூக்களினின்றும் வெகு சிரமப்பட்டு ஓய்ச்சல் ஒழிவின்றிச் சேகரித்து வைத்த தேனைப்பறிகொடுத்தது மட்டுமின்றி உயிர்க்கே தீங்கையும் விளைவித்துக்கொண்ட இவ்வீக்கள், உண்டு உடுக்காது மெய்வருந்திப் பாடுபட்டுத் தேடிய ஏராளமான திரவியத்தை நல்வழியிற் செல விடாது இரவோர்க்கீதல் முதலியன புரியாது சேர்த்து வைக்கும் பேதைமாக்களுக்குச் சிறந்த சற்புத்தி புகட்டக் கூடியதாய் இருக்கின்றன. உண்மையிலேயே

> "உடாதும் உண்ணுதும் தம் உடம்பு செற்றும்
> கெடாத நல்லறமும் செய்யார்—கொடாஅது
> வைத்து ஈட்டினார் இழப்பர் வான்தோய் மலைநாட
> உய்த்து ஈட்டும் தேனீக் கரி." என்ற

நாலடிச்செய்யுள் வெகுவாய்ச் சிந்திக்கத்தக்கதே.

"தேன்காட்டி":—தேன் கூடு இருக்கும் இடம் தெரிந்தால் தானே மனிதன் இவ்வாறு தேன் எடுக்கக் கூடும்? தெரியாவிடில் என்ன செய்வன் எனில், யாதானும் ஒன்றன் உதவியினால் அறிவன். உதாரணமாக: ஆப்பிரிக்காவில் வானம்பாடி அளவுள்ள ஓர் சிறு புள்ளிருக்கிறது. இப்பறவைக்குத் "தேன்காட்டி" (Honey Guide) என்றுபெயர். குயிலுக்குக் கூடு கட்டவேனும் குஞ்சு பொரிக்கவேனும் தெரியாதென்றும் அதன் குஞ்சுகளைக் காக்கை முதலிய வேறு பக்ஷிகளே பொரித்துக் கருதி வளர்க்கின்றன வென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? இத் தேன் காட்டியும் இவ் விஷயங்களில் குயிலைப்போலத்தானாம். இஃதொரு பிழைக்கத் தெரியாத பறவையாய் இருந்தும் இதற்குத் தேனையும் தேனீக்களையும் உண்ண வெகு பிரியம். ஆயினும் என்? இவ்விரண்டில் ஒன்றேனும் அது தன் முயற்சியினால் பெறமுடியாது. ஏனெனில், அது தேன் கூட்டண்டை

போகு முன்னரே இறகினால் மூடப்பட்ட அதன் சரீரத்தில் கொட்டினாலும் பயனில்லையெனத் தெரிந்துகொண்ட சிற்றீக்கள் அதன் கண்ணையே பார்த்துப் பிடுங்கும். இப்பொழுது பக்ஷி தப்பித்துக் கொண்டால் தான் உயிரோடிருக்கும். இல்லாவிடில், இனி என்றென்றும் இரை தேட முடியாமல் பட்டினியால் வருந்திச் சாகவேண்டியதுதான். ஆயினும் இது மூடத்தனமாய் உயிருக்குத் தீங்கு தேடிக்கொள்வது அரிது. ஆனால் தான் தேன் ஈ இவற்றின் பேரிற் கொண்ட ஆசையை விடுகிறதோ வென்னில் அதுவும் இல்லை. பின்னையது எப்படித் தனதெண்ணத்தை முடித்துக் கொள்ளுகிறதென்று பார்ப்போம். அது தேன் கூட்டை எங்கேனும் கண்டு கொண்டு விட்டால் அதற்குத் தலை கால் தெரியாமல் சந்தோஷம் பிறந்துவிடும். உடனே அது எவனாவது ஒருவனைத் தேடிச் சென்று கண்டு பிடித்து அவன் தலையைச் சுற்றிச்சுற்றி வட்ட மிட்டு அவனைத் தன்னை கவனிக்கும்படி செய்து அவன் பார்க்கக்கூடிய ஓரிடத்தில் போய் உட்காரும். இது நடிப்பதைப் பார்க்கும்பொழுது

பொற்புள் ளதனைப் பிடிப்பான் நளன்புகுகக்
கைக்குள் வரு மாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல இருந்ததுகண் டன்றே
வளைக்கு மாறு எண்ணினான் மன்—என்ற

புகழேந்திவெண்பா ஞாபகத்தில் வராமற்போகாது. நிற்க. மனிதன் இப்பக்ஷியின் கருத்தை நன்கறிவன். அதனுடன்புறப்பட்டுச் செல்லத் தயாராய் இருக்கும் சமயத்தில் சிட்டிஅடிப்பன். இக்குறிப்பைப் பக்ஷிஅறிந்து கொள்ளும். உடனே அது புறப்பட்டு அவன் பார்க்கக்கூடியதூரத்தில் போய் உட்கார்ந்துகொள்ளும். மனிதன் சமீபித்தவுடன் மீண்டும் சற்று அப்பால்போய் உட்காரும். இங்ஙனம் அது போகப்போக அவனைத் தேன் கூடு இருக்குமிடத்திற்கு இட்டுச்செல்லும். கூட்டைக்கண்டவுடன் முன்பு நாம் சொல்லியதுபோல் ஈக்களைத் தீயாலும் புகையாலும் கொன்று கூட்டைக்கைப்பற்றித் தேன் எடுப்பன். பின்னர் தான் தேன்பெறுவதற்குக் காரணமாய் இருந்த பறவைக்குத் தேனில் ஒரு சிறிது கொடுப்பன். அவன் கொடுக்கும் தேன் அதன் வயிற்றிற்குப் போதுமானதாய் இருந்தால் அது அங்கிருந்து பறந்தோடிவிடும். ஆனால் பேராசையுள்ள மனிதன் இதற்குப்போதுமான தேனை கொடுப்பதில்லை. இதற்குக் கொடுபடும் தேன் கிடந்த பசியையும்கிள்ளித் தான் எடுக்கும். ஆதலின் அது இம்மனிதனை வேறொருகூட்டிற்கும் முன்மாதிரி அழைத்துப்போய் மீண்டும் கூலிபெறுமாம். சிலசமயங்களில் இவை சேர்ந்தாற்போல் மூன்று நான்கு கூட்டிற்குக் கூட கூட்டிச்செல்லுமாம். தேன்கூடிருக்கும் இடங்களின் ஜாப்தாவைத்திருக்கும் இப்பறவைகளின் உதவியைப் பெறும் மனிதர் பாக்கியசாலிகள்தாம்.

தேனீ மூலமாய்த் தேன் கூடறிதல்.

தேன் காட்டி எங்குமா இருக்கிறது? இல்லா ஊர்களில் தேன் கூடிருக்கும் இடம் அறியும்விதம் கூறுவம்:—உதாரணமாக ஆஸ்திரேலியாவில் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்: சாதாரணமாகத் தேனீயானது தன்னிருப்பிடத்தை விட்டு இரண்டு மைலுக்கு அப்பால் போகவேபோகாது. தவிரவும் தேன் கொண்டுபோகும் ஈயானது அங்குமிங்கும் நில்லாது நேரே தனது வீடுநோக்கியே செல்லும். இவ்விரு விஷயங்களும் உண்மையே. ஆதலின் தேன் கூட்டின் இருப்பிடம் அறியவேண்டும் ஒருவன், தேன் கொண்டுபோகும் ஈ ஒன்றைக் கண்டு பிடித்து அதனைத் தொடர்ந்து சென்று அறியலாமல்லவா? வாயினால் இப்படிச் சொல்லலாமேயொழிய சாமானியமாய் முடிக்கக்கூடிய காரியமா இது? ஒரு ஈ தட்டுப்பட்டால் தேன் கொண்டுபோகிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளலாமேயன்றி அதனைப் பின்றொடர்ந்து செல்ல யாரால் இயலும்? அதன் ஓட்டம் எங்கே? மனிதன் ஓட்டம் எங்கே? ஒருவேளை அதனைத் தொடர்ந்து விரைந்தோடும் மனிதன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொண்டபோதிலும் அது பல திக்குகளிலும் பாய்ந்து பாய்ந்து ஓடுமே. தவிரவும் பறக்கும்பொழுது கண்ணுக்குத்தான் தெரியுமா? எத்தனையோ ஜந்துக்கள் உயரப் பறக்கின்றனவே. இதுதான் தான் பார்த்த தேனீ என்று அவன் எப்படி அறிவன். ஆதலின், ஓர் தேன்கொண்டு போகும் ஈயுடன் தொடர்ந்து செல்லவேண்டுமானால், முதலாவது அதன் வேகம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவது மற்ற ஈக்கள் அல்லது பறக்கும் ஜந்துக்களுக்கும் இதற்கும் வித்தியாசம் கண்டு பிடிக்கக்கூடிய யாதானும் ஓர் அடையாளம் இருத்தல்வேண்டும். இவ்விரு காரியமும் சாத்தியப்பட்டால்தான் மனிதன் அதனுடன் தொடர்ந்துசெல்லக்கூடும். ஆதலின், ஆஸ்திரேலியன் என்னயுக்தி செய்கிறான்பாருங்கள்! வெண்பஞ்சை உருட்டித்திரட்டிச் சிறு உண்டையாக்கி அதில் பிசின் தடவி அவ்வுண்டையைத் தேனீமுதுகில் ஒட்டவைப்பன். இப்பொழுது அவன் அதனைச் சுலபமாய்த் தொடர்ந்து செல்லலாமல்லவா? ஏனெனில், தேன் சுமப்பதுடன் பருத்தி உண்டையையும் அவ்வற்பஜெந்து தூக்கிச்செல்லவேண்டிவருவதால் அதிகமாய் ஓட அதனால் எப்படிமுடியும்?

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணய்யர்,

அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.

&

Asst. Master A. M. High School, Madura.

மன ஏகாக்கிரம்.

[முன் தொடர்ச்சி]

ஜலத்தின் உபயோகம் ஜனங்களுக்குத் தெரியவேண்டுவது மிகவும் முக்கியம். இயற்கையின் அற்புதத்தைப் பாருங்கள். இந்தப் பூமியானது எங்ஙனம் மூன்றில் ஒருபாகமாகவும் சமுத்திரம் மூன்றில் இரண்டுபாகமாகவும் இருக்கின்றனவோ அங்ஙனமே மனிதனுடைய சரீரத்தில் ஜல அம்சம் மூன்றில் இரண்டு பாகமாகவும் பிருதிவி அம்சம் மூன்றில் ஒரு பாகமாகவும் இருக்கின்றன. அங்ஙனமிருக்க உணவு வகைகளாகும் கட்டிப் பதார்த்தங்களையே அதிகமாகச் செலுத்தினால் என்னவாகும்? சற்று யோஜித்துப் பாருங்கள். இரக்த ஓட்டமே பிராண ஆதாரம் என்று அறியாதார் மிகவும் சிலரேயன்றோ? ஜல அம்சம் போதிய அளவு சேர்க்காது பிருதிவி அம்சமே அதிகமாகச் சேர்த்து வந்தால் அது இரக்தம் ஓடாதவாறு தடுக்க முயன்றதல்லாது வேறென்னாகும்? பிராணனை வெறுத்தார் செய்ய வேண்டுவதொன்றை அதனை விரும்புவார் செய்தல் என்ன அறியாமை பார்த்தீர்களா? கட்டிப் பதார்த்தங்களுள்ளும் ஜலம் கலந்திருக்கின்றது. அதனால் தான் ரோகம் இவ்வளவில் மட்டுப்பட்டிருப்பது. இல்லையானால் மரணத்துக்கும் ஓர் கணக்குண்டோ? தவிரவும் உட்சென்ற உணவாதிகள் ஜீரணிப்பதற்கும் ஜலம் அத்தியாவசியமாயிருக்கின்றது. உணவாதிகள் ஜீரணிப்பது உமிநீர், பித்த நீர் முதலிய ஜல அம்ச சாதனங்களால் மாத்திரம் தானென்று சரீர தத்துவ சாஸ்திரம் உணர்ந்த எவரும் அறிவர். சரீரத்தில் ஜல அம்சம் மட்டுப்பட்டால் ஜீரணிப்பிக்கும்சக்தியுடைய ஜல அம்ச தாதுக்கள் உண்டாதல் யாங்ஙனம்? சாதாரணமாக ஜனங்கள் வயிறு நிறையச் சாப்பிடுங் காலங்களிலெல்லாம் பதிவு வழக்கத்திற் கதிமானதாக முண்டாகிறதை அநேகர் தம் அநுபவத்தில் கண்டிருக்கலாம். அதற்குக் காரணமென்ன? அவை

களை ஜீரணிப்பிப்பதற்கு ஜல அம்சம் தேவையாக இருப்பதால் தாகமுண்டாகின்றது. உப்புச் சேர்ந்த நீரானது தசைகளுக்குட் கூடச் செல்வது பிரயாசையாகையால் அதிக ஜலத்தில் அதைக் கரைத்தால் லகுவாக இருக்குமென்பதால் உப்பு சற்று அதிகமாகச் சேர்ந்த வுடனெல்லாம் தாகம் அதிகப்படுகின்றது. அதுபோலவே அதிக சத்துள்ள பதார்த்தங்கள் உட்சென்றால் ஜல அம்சத்துக்கு அதிகத் தேவை நேரிட்டுத் தாகம் அதிகமாக உண்டாகின்றது. ஆகையால் போதிய அளவு ஜலம் அகத்துச் செல்லவில்லை யானால் ரோகம் தாராளமாக உண்டாகுமென்பதற்கு யாது தடையிருக்கின்றது? சரீர போஷணைக்கும் ஆரோக்கியத்துக்கும் ஆக உட்செல்லும் சாதனங்களுள் ஸ்தூல பதார்த்தங்களைப் பார்க்கிலும் சூக்ஷ்ம பதார்த்தங்கள் அதிக ஆவசியகமானவைகளாகவும் அதனால் பிரதானமானவைகளாகவும் இருக்கின்றன. பிருதிவியைப் பார்க்கிலும் ஜலம் எத்தனையோ மடங்கு சூக்ஷ்மமானது, ஜலத்தைப் பார்க்கிலும் வாயு எத்தனையோ மடங்கு சூக்ஷ்மமானது. அதனாலன்றோ எத்தனை தினங்களுக்கு ஆகாரமில்லாமலிருக்க இயலுமோ அத்தனை தினங்களுக்கு ஜலமில்லாமல் இருக்கவும் சில நிமிஷங்கள்கூட வாயுவில்லாமல் ஜீவிக்கவும் இயலாமலிருக்கின்றன. சூக்ஷ்மபதார்த்தங்களின் சக்திகள் ஸ்தூலபதார்த்தங்களினுடையவைச ப் பார்க்கிலும் கூடுதலாக இருக்கும் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒருதினத்துக்கு 4 பைன்டு முதல் 5 பைன்டு அளவுஜலம் தேவைப்படும். ஒருபைன்டு என்பது 12 அவுன்ஸ்களாகும். இவ்வளவும் ஜலமாகவே இருக்கவேண்டுமென்பதில்லை. ஒருவனுக்குட் செல்லும் ஜல அம்சங்களின் மொத்தம் அவ்வளவிருக்கவேண்டுமென்பதேயாகும்ஜலஅம்சமானது பான சாதனங்களுள் ளெல்லாம் இருப்பதும்தவிர கட்டிப்பதார்த்தங்களாகும் உணவுவர்க்கங்களுள்ளும் இருக்கின்றதென்று முன்னமேமேயே பிரஸ்தாபித்திருக்கின்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

றோமன்றோ? பெற்றோர்களிலநேகர் குழந்தைகளுக்குச்சோறு சோறு என்று அன்னத்தையும் அதுபோலுள்ள உணவாதிகளையுமே செலுத்திவருவதும் தவிர சிலசமயங்களில் குழந்தைகள் தாகமிகுதியால் ஜலமருந்தக்கேட்டாலும் கொடுக்காமலும் கொடுத்தாலும் தாகமடங்கக்குடிக்க ஒட்டாமலும். தடுத்துவருகிறார்கள். அது மிகவும் மடத்தனம் மேல் எச்சரிக்கையாக அவர் ஜலத்தையும் பேணக்கடவர்.

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

வைகரி தன் செவிக்குமாத்திரங் கேட்குஞ் சூக்கும வைகரி யென்றும் பிறர் செவிக்குங் கேட்குந் தூல வைகரியென்றும் இரண்டு வகைப்படும். அதன் இலக்கணமாவது சொல்வானுக்கும் கேட்பானுக்கும் சவிகற்ப வுணர்வு உண்டாதற்கு எதுவாதலும், மத்திமைத் தானத்துச் சூக்கும ரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்றா னுந்தப்பட்டெழுந்து புறத்தேயடைத லுடைத்தாதலுமாகிய இரண்டும் இலக்கணமாக வுடையது. இனி ஐப்பத்தோ ரக்கரங்களாவன:—அகரமுதல் க்ஷ ஈறாகவுள்ள எழுத்துக்களாம். எண்பத்தொரு பதங்களாவன, ஓம் என்னும் பத முதலாகச் சொல்லப்பட்டவைகளாம். சத்தகோடி மகாமந்திரங்களாவன, நம, சுத முதலாகச் சொல்லப்பட்ட ஏழு அந்தங்களை யிறுதியிலுடைய மந்திரங்களாம். இருபத்தெட் டாகமங்களாவன:—காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம். இவ் வாகமங்கள் மாந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தம் எனவும், பெயர்பெறும். இவ் வாகமங்களுக்கு கிரந்தவளவாவன காமிகத்துக்குப் பரார்த்தம். யோக

ஜத்துக்கு இலக்ஷம், சிந்தியத்துக்கு இலக்ஷம், காரணத்துக்குக் கோடி, அசிதத்துக்கு நியுதம், தீப்தத்துக்கு நியுதம், சூக்குமத்துக்குப் பதுமம், சகச்சிரத்துக்குச் சங்கம், அஞ்சுமானுக்கு ஐந்திலக்ஷம், சுப்பிரபேதத்துக்கு மூன்றுகோடி, விசயத்துக்கு மூன்றுகோடி, நிச்சுவாசத்துக்குக்கோடி, சுவாயம்புவத்துக்கு ஒன்றரைக் கோடி, ஆக்கினேயத்துக்கு முப்பதினாயிரம், வீரத்துக்கு நியுதம், ரௌரவத்துக்கு எட்டர்ப்புதம். மகுடத்துக்கு இலக்ஷம், விமலத்துக்கு மூன்றிலக்ஷம், சந்திர ஞானத்துக்கு மூன்றுகோடி, முக விம்பத்துக்கு இலக்ஷம், புரோத்கீதத்துக்கு மூன்றிலக்ஷம், இலளிதத்துக்கு எண்ணாயிரம், சித்தத்துக்கு ஒன்றரைக் கோடி, சந்தானத்துக்கு ஆறாயிரம், சர்வோக்தத்துக்கு இரண்டிலக்ஷம், பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டிலக்ஷம், கிரணத்துக்கு ஐந்துகோடி, வாதுளத்துக்கு இலக்ஷம். ஆகமம் என்பதற்குப் பொருள் ஆ என்பது-பாசம், க என்பது-பசு, ம என்பது-பதி எனப் பொருள்படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்த லக்ஷணத்தை உணர்த்து நூல் என்பதே சிறந்த பொருள் என்க. ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாம் ஆதலால் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து, மோக்ஷத்தைக் கொடுத்தல் பற்றி ஆகமமெனப் பெயராயிற்றென்று கூறுதலும் ஒன்று.

இவை ஞானபாதம். யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்களுடையனவா யிருக்கும்.

இவற்றுள் ஞான பாதத்தில் பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதன சத்தி யென்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவ முதற் பிருதிவி தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களதுற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியா முறைமையும், புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், அதமப் பிரளயம் மத்திமப் பிரளயம் மகாப் பிரளயங்களின் சொரூபமும் அந்தப் பிரளயங்களின் பின்னாச் சிருட்டியா முறைமையும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், பாசுபதம் மாவிரதம் காபால முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும்.

இனி யோக பாதத்தில் இந்த முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசரும், ஆன்மாவும், பரமசிவனும். சத்தியும் சகத்துக்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும வல்லமையும், அணிமாதி சித்திகளுண்டாமுறைமையும், இயம முதலிய அட்டாங்கங்களின் முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும், கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில் மந்திரங்களின் உத்தாரணஞ் சர்தியாவந்தனம் பூசை செபஓமங்களும் சமயம் விசேட நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக் குபாயமாகிய தீக்ஷையுங் கூறப்படும்.

இனிச் சரியாபாதத்தில் பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும், சிவலிங்க விலக்கணமும், நந்தி முதலிய கணநாத ரிலக்கணமும், செபமாலை யோகப்பட்டந் தண்டங் கமண்டல முதலியவற்றி னிலக்கணமும், அந்தியேட்டி விதியும் கூறப்படும்.

இவ் வாகமங்கள் பரமசிவனுக்கு அவயவங்களா நிற்குமுறை எப்படியெனின் கூறுதும், பரமசிவனுக்கு, காமிகம் அடிகளாம்; யோகசம் கணைக்கால்களாம்; சிந்தியம் திருவடி விரல்களாம்; காரணம் கெண்டைக் கால்களாம்; அசிதம் முழந்தாள்களாம்; தீப்தம் தொடைகளாம்; சூக்குமம் குய்யமாம்; சகச்சிரம் கடிதடமாம்; அஞ்சுமான் முதுகாம்; சுப்பிரபேதம் கொப்பூழாம்; விசயம் உதரமாம்; நிச்சுவாசம் மூக்காம்; சுவாயம்புவம் முலைகளாம்; ஆக்கினேயம் விழிகளாம்; வீரம் கழுத்தாம்; ரௌரவம் செவிகளாம்; மகுடம் முடியாம்; விமலம் கைகளாம்; சந்திரஞானம் மார்பாம்; முகவிம்பம் முகமாம்; புரோற்கீதம் நாவாம்; இலளிதம் கபோலங்களாம்; சித்தம் நெற்றியாம்; சந்தானம் குண்டலமாம்; சருவோக்தம் உபவீதமாம்; பாரமேசுரம் ஆரமாம்; கிரணம் இரத்தினாபரணங்களாம்; வாதுளம் பரிவட்டமாம்; இச் சைவாகம சித்தாந்தம் திருவமுதாம் என்க.

காமிகத்தில் நிச்சுவாசம் இருதயமென்றும், வாதுளம் பிராணனென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ் வாகமங்கள் சிவபேதம் என்றும் உருத்திரபேதம் என்றும் இரண்டு வகைப்படும். சிவபேதமாவன காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் என்னும் பத்துமாம். இனி உருத்திர பேதமாவன விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம், என்னும் பதினெட்டுமாம். இவ் விருபத்தெட் டாகமங்களையும் கேட்டவர்கள் பெயரும் உபபேதங்களும் கூறுவாம். காமிகத்தைக் கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர் என மூவர். உபபேதம் மூன்று. யோகசத்தைக்கேட்டவர் சுதர், பஸ்மர், விபு என மூவர். உபபேதம் ஐந்து. சிந்தியத்தைக் கேட்டவர் சுதீப்தர் கோபதி அம்பிகை என மூவர். உபபேதம் ஆறு. காரணத்தைக் கேட்டவர் காரணர், சர்வருத்ரர், பிரசாபதி என மூவர். உபபேதம் ஏழு. அசிதத்தைக் கேட்ட

வர் சுசிவர், சிவர், அச்சுதர் உபபேதம் நான்கு. தீப்தத்தைக் கேட்டவர் ஈசர், ஈசானர், உதாசனர் என மூவர். ஈசானருக்குப் பதிலாக திரிமூர்த்தி என்று சில்வாகமங் கூறும் உடபேதம் ஒன்பது. சூக்குமத்தைக் கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர் என மூவர் உபபேதம் ஒன்று. சகச்சிரத்தைக் கேட்டவர் காளர், பீமர், தருமர், என மூவர் உபபேதம் பத்து. அஞ்சுமானைக் கேட்டவர் அம்பு, அக்ரர், இரவி உபபேதம். பன்னிரண்டு. சுப்பிரபேதத்தைக் கேட்டவர் (தேசேசர் என்றும் ஆகமங் கூறும்) தசேசர், விக்நேசுவரர், சசி என மூவர் உபபேதம் ஒன்று. இந்த முப்பது பேரும் சிவபேதம் என்றறிக.

இனி விசயத்தைக் கேட்டவர் அநாதி உருத்திரர் பரமேசர் என இருவர் உபபேதம் எட்டு. நிச்சுவாசத்தைக் கேட்டவர் தசாரணர் பார்வதி என இருவர். உபேதம் எட்டு சுவாயம்புவத்தைக் கேட்டவர் நிதநேசர் பிரமர் என இருவர் உபேதம் மூன்று. ஆக்கிநேயத்தைக் கேட்டவர் வியோமர் உதாசநர் என இருவர் உபபேதம் ஒன்று. வீரத்தைக் கேட்டவர் தேஜசு பிரசாபதி என இருவர் உபபேதம் பதின்மூன்று. இரௌரவத்தைக் கேட்டவர் பிரம் ஹணேசர் திருநந்திதேவர் என இருவர் உபபேதம் ஆறு மகுடத்தைக் கேட்டவர் சிவர் மகாதேவர் என இருவர். உபபேதம் இரண்டு. விமலத்தைக் கேட்டவர் சருவாத்மகர் வீரபத்திரர் உபபேதம் பதினாறு. சந்திரஞானத்தைக் கேட்டவர் அநந்தர், பிரகஸ்பதி என இருவர் உபபேதம் பதினான்கு. முகவிம்பத்தைக் கேட்டவர் பிரசாநந்தர், ததீசு என இருவர் உபபேதம் பதினைந்து. புரோர்க்கீதத்தைக் கேட்டவர் சூலி கவசர் என இரண்டு பேர். உபபேதம் பதினாறு. இலளிதத்தைக் கேட்டவர் ஆலயேசர் இலளிதர் என இருவர் உபபேதம் மூன்று. சுத்தத்தைக் கேட்டவர் பிந்து, சண்டிகேசுவரர் என இருவர் உபபேதம் நான்கு. சந்தானத்தைக் கேட்டவர் சிவநிஷ்டர், (அசம்பாதர் எனவும் ஆகமங்கூறும்.) அசம்வாயர் என இருவர் உபபேதம் ஏழு. சருவோக்தத்தைக் கேட்டவர் சோமர், நிருசிம்மர் என இரண்டுபேர் உபபேதம் ஐந்து. பாரமேசுரத்தைக் கேட்டவர் ஸ்ரீதேவி உசநர் என இருவர் உபபேதம் ஏழு. கிரணத்தைக் சேட்டவர் தேவவிபவர் சம்வர்த்தகர் என இருவர் உபபேதம் ஒன்பது. வாதுளத்தைக் கேட்டவர் சிவர் மகாகாளர் என இருவர் உபபேதம் பன்னிரண்டு. ஆக இருநூற்றெட்டு இந்த முப்பத்தாறு பேரும் உருத்திரபேதம் என்றறிக.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

அபிமானம்.

அபிமானமென்பது இடம், பொருள், ஏவல் என்னு மூன்று விஷயங்களிலும் உள்ள நீங்காப்பற்றுதலாம். இவ்வபிமானம் பெரும்பாலும் ஐஹிகமாம் அற்பானந்த விஷயாதிகளை அடையச் செய்வதற்குப் போந்த அருமையான சாதனமாக விருப்பினுஞ் சதா கவலையைத் தந்து நித்தியானந்தப் பேறடைவதற்குப் பெரிய விசகினமாக விருக்கின்றது. இக்குணத்தையே மமகாரமென்று மொழிவது.

அபிமானம், கல்வியபிமானம், பாஷாபிமானம். பொருளாபிமானம், சாதியபிமானம், ரூபாபிமானம், குணாபிமானம், மதாபிமானம், தேசாபிமானம், உலகாபிமானம், என ஒன்பது வகைத்தாம்.

கல்வியபிமானமென்பது, கல்வியிற்றேர்ந்து பொருளையேனும், புகழையேனுமடைய வேண்டுமென்பதும், ஏனைய கல்விமான்களினும் தாம் மேம்பாடுடையவரென மதிக்குமாறு எவ்வகையாலேனும் மற்றக் கல்விமான்களை வெல்வதிலேயே நோக்கமுடைமையுமே ஆதலின இஃது சுயநயத்தைச் சார்ந்ததே.

பாஷாபிமானமென்பது ஸ்வபாஷையைப் புகழ்ந்து பேசுவது, அவ்வாறு செய்பவர்கள் இதர பாஷைகளைப்பற்றி யிகழ்ந்துரைப்பது சகஜம்.

பொருளாபிமானமென்பது, பொருள் தேடுவதிலும் அதை விருத்தி செய்வதிலும் சேமித்து வைப்பதிலும், தானும் தனது சந்ததியினருமே அநுபவிக்க வேண்டுமென்பதும், அவ்வாறு செயவதாலிகழ்ச்சி நேரினும் அதைக்கருதாது தனது பொருளின் மேலேயே கருத்தை வைத்திருப்பதுமேயாம்.

சாதியபிமானமென்பது தத்தஞ் சுயசாதியைப் பற்றிப் புகழ்ந்துரைத்தாலும், மற்றவற்றை இகழ்ந்துரைப்பதுமே. இது 4 வகை வருணத்தினரைச் சார்ந்தது.

ரூபாபிமானமென்பது, தத்த முருவ பேதங்களாம் ஆண் பெண்ணென்னும் ரூபத்தின் மேலுண்டாமபிமானத்தைக் கூறுவது. ஆடவர்கள் ஆண்பிள்ளைகளைப் பற்றியும், மடந்தையர்கள் பெண்களைப் பற்றியும் புகழ்ந்து பேசுவது.

குணாபிமானமென்பது, அருளுடையார் சாதுக்கள். இவர்களைப் புகழ்ந்துரைப்பதும் அவர்களுடன் சேர்ந்திருப்பதும் அவர்களுக்கே உபகாரம் புரிவதுமே.

மதாபிமானமென்பது, சுயமத பூஷணம், புறமத தூஷணம் புரிவது.

தேசாபிமானமென்பது தஞ் சுய தேசத்தினர்களுடைய சுக கீர்த்தியைக் கருதிப் புரியும் சர்வ விஷயங்களையுமே கூறுவது. இவர்களொரு வித காருண்ய முடையோரெனக் கருதப்படுவார்.

உலகாபிமானமென்பது, சாதியாபிமானம், ரூபாபிமானம், பொருளாபிமானம், பதாபிமானம், குணாபிமானம், தேசாபிமான மிவை எதுமின்றிப் பொதுநலப் பிரியமும் பரோபகார சிந்தையுடைமையுமே. இது மற்ற அபிமானங்களிலும் சிறந்தது எனினும், இஃதும் பற்றுதலை யுடையதாமாதலின் இவ் வபிமானமுந் துக்கத்திற் கிடமே. ஆயினமையின், துக்க நிவாரண மளிக்கும் ஞானமே நித்தியானந்தத்தைத் தரத்தகும் உத்தமாபிமான மெனப்படும். இதற்கும் அபிமான மெனும் நாம முளதெனினும் இந் நாமாபிமானம் போலி யபிமான மென்றே சொள்ளவேண்டும். ஏனெனில், ஏனைய வபிமானங்கள், சதா சஞ்சலத்தைத்தருஞ் சிந்தையை உதிக்கச் செய்வதும், அதை விருத்தி செய்வது மதனால் துக்கமுண்டாக்குவதுமாக விருக்கின்றன. ஆனால் ஞானாபிமானமோ நிர்ச்சிந்தையையும், நிராசையையும் உண்டாக்கி, சதானந்தத்தைத் தருவதாக விருக்கின்றது. இவ் வபிமானமானது, தத்வ சாஸ்திரம், ஆயுர்வேதம், பிராணி தர்மகுண வித்தை, இரசாயன சாஸ்திரம், நியாய விலக்கணம், கணித சாஸ்திரம், சங்கீதம், பௌதிக பூகோளசாஸ்திரம், வானசாஸ்திரம், தருமசாஸ்திரம், பலதேச சரித்திரங்கள், ஞானவான்கள், துறவிகள் சரித்திரங்கள், இத்தகைய சாஸ்திரங்களை விசாரணை செய்துவருவதாலும், சற்சனசங்கப் பழக்கமெனும் மானிடக் கல்விப் பயிற்சியாலும் உதிப்பது. இஃதுடையார், யான், எனதென்னும் பற்றற்றவராகவும் உயர்வு, தாழ்வு என்கிற பேதமின்றிச் சகல சராசரங்களிலும் பேதமில்லாம லவற்றினிடத்தில் அன்பு அனுதாபம், பரோபகாரஞ் செய்தல், சுயநயமறுப்பு, விருப்பு, வெறுப்பில்லாமை. சித்த சமாதானம், இவை முதலாய சுகுண சுகர்தங்களுடையவராகவு மிருப்பார். இவ் வபிமான முடையாரே குணவந்தர்களென்னு மனுக்குலாத் துங்கத்வ முடையா ரெனப்படுவர். மகுடாதிபதிகளையும், மண்டலேசுவரர்களையும் அவர்கள் அபிமானியாவிடினும் அவர்களை மேற்கூறியவர்களபிமானித் தடிவணங்குவர். அவர்களுக்கு மேற்கூறியுள்ள நவாபிமானங்கண்மீது மபிமான மின்றெனினும் அவ்வபிமானங்க ளவர்களை யபிமானிக்கும். இருளும், வெளியும் ஏகமென் றெஞ்சா தும்வர், நாடும் காடும் அவர்

கட்டுச் சுகந்தரு மூடர்மிலேயே. கரும்பும் வேம்பும் மனோஹர உணவே. தாரமுந் தாயே, துர்மணமும் நன்மணமே. அவ்வபிமானிகளுக்கே நித்தியானந்தஞ் சுதந்தரம். ஏனைய அபிமானிகளோ அசுவாதந்திரியர். ஆதலின் இத்தகைய அபிமானத்தையே அபிமானித் தடைய முயல்வதே அபிமானத் திற்கழகாம். ஆயினமையின் சகோதரர்களிவ் வபிமானத்தை யுடையவர்களாக விருக்கவேண்டு மென்பதுவே சகோதரியின் வேண்டுகோளாம்.

இங்ஙனம் அன்புள்ள
கோ. சர்வஜன சகோதரி.

ஓஷதிசாஸ்திரம்.

[முன் தொடர்ச்சி]

சில செடிகளில் புஷ்பத்துக்குச் சமீபத்திலுள்ள இலைகள் பலவர்ணங்களுள்ளனவாயிருக்கின்றன. புஷ்பங்கள் சிறியவை யாயிருக்குஞ் செடிகளிலே அநேகமாய் இவ்வாறான அமைப் பைக்காணலாம். வண்டுகள் முதலியவற்றைக் கவர்ந்து அவை களின் மூலமாய்ப் பூந்தாதுக்களை விநியோகப்படுத்தி அச்செடி களை விருத்தியாக்கவேண்டுமென்பதே அவ்வர்ண அமைப்பின் நோக்கம்.

காய்கனிகள்.

சுக்கில சோணித சம்பந்தத்தாலுண்டாகிற வித்தானது தனித்தும பல ஒருங்கு சேர்ந்தும் காயாகிறது. அவ்வித்துச் சில சமயங்களில் கவசம் அமையப்பெற்றும் சில சமயங்களில் கவசமமையப்பெறாமலும் இருக்கும். இக்கவசங்கள் பலவிதமா யிருக்கும். வித்தைக்காட்டிலும் கவசம் ரசம் உள்ளதாகவும் ருசியுள்ளதாகவும், வெளிப்பகட்டுள்ளதாகவும், பஞ்சுபோ றதாகவும, பிசுக்குள்ளதாகவும், இன்னும் பலவிதமாகவு இருககின்றது. சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கவ சங்களுமிருக்கின்றன. வித்தின் உபயோகம் முன்னரே கூறி யிருக்கின்றோம். அவ்வித்துச் சிலசமயங்களில் தெண்ணீ ர்க்கயத்துச் சிறுமீன் சினையினும் நுண்ணிதாகவுமிருக்கும்.

பூதக்கண்ணாடியாலும் பார்ப்பதரிதாகும்படியான மிக நுண்ணியதாகவு மிருக்கும். இந் நுண்ணிய வித்தின்கண்ணேயே பெரிய விருக்ஷத்தின் தண்டு, இலை, மலர், காய், கனி முதலிய எல்லா உறுப்புக்களும் சூட்சுமமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கருத்தையே சாந்தோக்கிய உபநிஷத்தில் ஜகத்தெல்லாம் சங்கோச காலத்தில் அதாவது பிரளய காலத்தில் பரமாத்துமாவினிடம் "இல் நுழைக் கதிரின் நுண்ணணுப்போல" ஒடுங்குகிறது என்று கூறிய உவமானத்தாற் காணலாம்.

கவசங்கள்.

செடிமுதலியவற்றின் அற்புதப்பேறாகிய வித்துக்களைக் காப்பாற்றும் வண்ணம் கெட்டியாகவும் உறுதியாகவும் கவசங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தென்னை, கமுகு, பனை முதலியவை இதற் குதாரணம். வித்துக்கள் பூமியுடன் சம்பந்திக்கும்வரை கவசங்கள் காப்பாயிருக்கின்றன. உள்ளிருக்கும் வித்தானது பூமியில்பட்டு மண்ணுடன் சேர்ந்து ஈரமும் உஷ்ணமும் தாக்கவே கவசம் நீங்கி மேல்நோக்கி முளையாகவும் கீழ்நோக்கி வேராகவும் பரிணமிக்கிறது. இதைப்பற்றிப் பின்னர்கூறுவோம். பலவேறுபாடுள்ள கவசங்களை வித்து அமையப்பெறுவானேன்? இதனைச்சிறிது ஆராய்வாம்.

ஒரே இடத்தில் செடி, கொடி, மரம் இவற்றின் பின் சந்ததியும் வளர்ந்துவருமாயின் அது க்ஷீணதசையடைந்து நசித்துப் போகும். ஏனெனில் செடி, கொடிமுதலியவை விருத்தியடைய வேண்டிய திரவியங்கள் பெரும்பாலும் பூமியின்கண்ணே இருக்கின்றன. அத்திரவியம் முழுவதும் அச்செடிகளாலும் சந்ததிகளாலும் கிரகிக்கப்பட்டுச் சத்தே அற்றுப்போகிறது. இக்காரணங்கொண்டே வாழைபடி வாழையாகவிடாமல் வாழைக்கன்றைப்பெயர்த்துப் பெயர்த்து வேற்றிடங்களில் வைத்துப் பயிர் செய்கிறார்கள். இவ்வண்ணம் மனிதன் கைங்கரியத்தினால் முடிகிறதைத் தவிர்த்து வேறு விதமாகவும் இந்நோக்கம் நிறைவேறுகிறது. கவசம் அமைந்த வித்துக்களையுடைய காய்

கனிகளைப் பக்ஷிகளும், மிருகங்களும் நாடி வரும்படியாக ஈசுவரன் அவைகளுக்கு வாசனையையும், வர்ணங்களையும், ரசங்களையும் அமைத்திருக்கின்றனர். பக்ஷிகள் இக்கனிகளைக் கொத்திக்கோதித் தின்று அவற்றின் ரசங்களைச் சுவைத்து விதைகளைப்பல விடங்களில் சிதறச் செய்கின்றன. காகம் முதலிய சில பட்சிகள் இவ்வித்துக்களையும் விழுங்கி எச்சமிடுங் காலத்தில் கீழே வீழ்க்துகின்றன. வீடுகளிலும் கோவில்களிலும் சுவர்களின் மேலும் மதில்களின் மேலும் ஆல், அரசு, இத்தி முதலியன முளைத்திருப்பதற்குக் காரணம் இதுவே. "நெட்டிருப்புப் பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்ற செய்யுளாலும் இவ்வுண்மை விளங்குகின்றது. ஜாதிக்காய் முதலியவை பழுத்தவுடன் வெடிக்கும். அவ்வெடிப்பின் ஊடே கண்களைக் கவரும்படியான செந்நிறமுள்ள ஜாதிப்பத்திரியைக் கண்டு மாடப்புறு வானது மாமிசமென்று பிரமித்து அப்பழத்தைக் கௌவிக் கொண்டு பறந்து போய் வேறோர் இடத்தில் உட்கார்ந்து உண்ண ஆரம்பிக்கவே அது மாமிச மன்றென்றுணர்ந்து அதனைக் கீழே போட்டுவிட்டுப்போகும். இக்காக்ஷியை ஜாவாவை யடுத்த பாண்டா முதலிய தீவுகளிலுள்ள ஜாதிக்காய் தோட்டங்களில் காணலாம். சில வித்துக்கள் அருவிகள் ஓடைகள் மூலமாகவும் சமுத்திர மூலமாகவும் மிதந்துசென்று அந்நிய நாட்டுக் கரைகளிலொதுங்கி அங்கே வேரூன்றிச் செடி கொடிகளாகப் பல்கிப் பரவுகின்றதைப் பார்க்கிறோம். மருதம், தென்னை, கமுகு முதலியவை இதற்குதாரணமாம். இலவம்பஞ்சு எருக்கு முதலியவற்றின் பஞ்சு பற்றியிருக்கிற வித்துக்கள் காய் வெடித்தவுடன் பக்ஷிகள் போலப் பறந்து போய் வேற்றிடஙகளில் படிந்து விருத்தியாகின்றன.

அம்புக்கு இரக்கைகட்டினாற்போல் காணப்படும் நாணலின்வித்து மெல்லிய இரக்கையமையப்பெற்றுப் பறந்துவேற்றிடங்களை யடைவது யாவருமறிந்ததே.

ஆமணக்கு, குன்றிமணி, கழற்சிக்காய் முதலிய காய்கள் முற்றி வெடிக்கவே வித்துக்களைச் சிதறிப் பரவச் செய்யும்.

காய் முற்றுகிறதற்கு முன்னர் அடித்தண்டு ரசமில்லாம லிருந்து முற்றி வித்து பக்குவமான பிறகு அடித்தண்டு பெருத்து ரசமும் வர்ணமும் அமையப் பெறுகின்றது. இதற்கு முன்னரே இவ்விதம் ஏற்படுமாகில் பக்ஷிகள் இந்தப் பிஞ்சுகளை வேற்றிடங்களில் கொண்டுபோய்ப் போடும். அதனால் அதன் பயன் குன்றும்.

சில செடிகளில் தின்னமுடியாத காயும் தின்னக்கூடிய பழமும் உண்டாகின்றன. இதற்கு வேம்பு தக்க உதாரணம். பழுத்த பிறகு காகம் முதலிய பக்ஷிகள் இதன் பழத்தை உண்டு கொட்டையை எச்சத்துடன் வெளியேற்றுகின்றன. காயே ருசியா யிருக்கும் பக்ஷத்தில் அகன்கண்ணுள்ள விதை முளைக்கமுடியாது. இவை நிற்க.

சில வித்துக்கள் ஒருவகை முள் பற்றிய தாயிருப்பதால் அதை அணுகுகிற மிருகங்களின் சரீரத்தில் ஒட்டிக்கொள்ளுகின்றன. இவ்வண்ணம் பற்பல உபாயங்கள் மூலமாய் வித்துக்கள் பிறந்த விடம் விட்டு வெளியேறியே அபிவிருத்தி யடைகின்றன. இவற்றால் நாம் அறிந்து கொள்ளும் புத்தி யாவது. நாம் உள்ளூரை விட்டு வெளியேறாமல், இருக்கிற சொற்ப நிலத்தைப் பங்கு பங்காகப் பிரித்து வயிறு வளர்த்து வருவதால் அபிவிருத்தியின்றி க்ஷீணகதியை யடைகிறோம். ஏனைய ஜாதியார்களோ நாடெங்கும் வியாபித்துப் பல விஷயங்கள் கற்று மனவிகாசமடைந்து மேன்மையடைந்து வருகின்றனர். சரீரபோஷணையின் நிமித்தமாகவாவது அந்நிய நாடு சென்று பொருள் தேடவேண்டுவது இன்றியமையாதது. "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று நம் கவி இரண்டாயிரம் வருஷம் முன்னர்க் கூறியதை நாம் சரியானபடி இன்னும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரவில்லை. மனமும் புத்தியும் விசாலித்து அபிவிருத்தியடைய வேண்டுமானால் பலதேசங்கள் சென்று பல காக்ஷிகளைக்கண்ணுற்று ஆநந்தமடைவதன்றி ஆங்குள்ள பற்பல விஷயங்களைக்கற்றும் கேட்டும் தெளியவேண்

டும். ஸ்தாவர வர்க்கங்களும் அறிவமைந்து இவ்வுண்மையை அறிந்து ஒழுகுவன எனத்தோற்றுகின்றதே. அவ்வாறிருக்க மானுடன் தேச அபிவிருத்திக் கின்றியமையாத இவ்வுண்மையைக் கைக்கொண்டொழுகுவதற்குத் தாமதிப்பதேன் ?

[இன்னும் வரும்]

ப. நாராயணையர்.

இந்தியாவும் தொழிற் பாடசாலைகளும்.

இவ்விந்தியாவிலுள்ள பல இடங்களில் சித்திரக் கல்விப் பாடசாலைகளும், இஞ்சினீயர் பாடசாலைகளும், தொழிற் பாடசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் சில கவர்ண்மெண்டாருடையவும், டிஸ்திரிக்டுப் போர்டாருடையவும், வேறு சில கிரிஸ்டியன் மிஷன் போன்ற பல கனவான்களுடையவுமாயிருக்கின்றன. இப்பாடசாலைகள் கல்கத்தா, பம்பாய், சென்னை, லாகூர் இவ்விடங்களில் விஸ்தரித்துள்ளன. இவ்வித பாடசாலைகள் இப்பொழுது ஒவ்வொரு டிஸ்திரிக்டுகளிலும் ஏற்பட்டுள்ளன.

பிரஜைகள் தேசாசாரங்களை யநுசரித்து அதன் மூலமாகத் தங்கள் புத்தியாலும் ஊக்கத்தாலும் கைத்தொழில் முதலிய பலவித தொழில்களில் தேர்ந்து ஜீவனோபாயம் அடைய வேண்டியே இவைகள் அவ்வத் தொழில்களில் தேர்ந்த கனவான்களால் நடத்தப்படுகின்றன.

பல பாடசாலைகள் தக்க தொழிற் படிப்பாளிகள் கிடையாமையால் சாதாரணமானவர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. அதனால் அப்பாடசாலைச் சிறுவர்கட்கு அவ்வத் தொழிலில் சரியான பயிற்சி பெற இடமின்றியும் வேறு தொழிலில் பிரவேசிக்கச் சங்கடமாயும் வாழ்நாள் வீணாகின்றன.

இவ்வித கஷ்டத்துக்கிடங்கொடாமல் மாணாக்கரின் பெற்றோர்கள் கவனித்து அந்தந்த அதிகாரிகளிடம் முறையிட்டுச்சீர்

திருத்தஞ் செய்ய வேண்டுவது கடமையாகவும் அவ்வாறு செய்யாமல் பிள்ளைகளைக் கெடுக்கிறார்கள்.

இதற்குக்காரணம் என்னவெனில் வெளித்தேச இறக்குமதி மிகுதியால் சுதேச வஸ்துக்களில் விருப்புமில்லாமையும், அதனால் சுதேச வஸ்துக்களின் உயர்வு தெரியாமையுமேயாம்.

ஜப்பான் தேசம் நம் இந்தியாவிலும் சிறிதே யாயினும் புத்தி கூர்மையாலும், வெளிதேசங்களில் போய் இதர தொழிற் பயிற்சி செயவதாலும், தங்கள் தொழில் அபிவிருத்தியைக் கருதித் தக்கபடி உழைத்து வருவதாலும் நம்மிலும் மிக்க சிறப் படைந்துள்ளதாயிற்று. இவ்வித நடவடிக்கைகளைச் சிறிதளவாவது நாமும் கைக்கொண்டால் இந்தியா சிறப்படையும். இத்தேச கனவான்கள் இத்தொழிற் பாடசாலையின் க்ஷேமத்தைக் கருதி மேலதிகாரிகளைக்கொண்டு தக்கபடி சீர்திருத்தி அதற்கு வேண்டும் பொருளைத் தேடி ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தி வளர்ப்பாராயின் நாமடையும பயனுக்கு அளவு கூற முடியாது.

இவ்விதப் படிப்பு விஷயத்தைப் பற்றி அமெரிக்கா முதலான் தேசாபிவிருத்தியின்பொருட்டு Mr. Lepabes God Frey Zealand M. A; F. R. L. S. துரையவர்கள் செய்திருக்கிற உபகாரம் அத்தேசத்தார் யாவரும் கொண்டாடக் கூடியதாயிருக்கிறது.

அவர் இந்தியாவின் க்ஷேமத்தை யெப்பொழுதும் கருதினவராதலால் இத்தேசத்தின் Technical School களின் வித்தியாபி விர்த்தியின் பொருட்டும் தகுந்த கனவான்களின் ஆதரவின் பேரில் நம் தேசத்தாருக்கு இவ்விஷயங்களைப் போதிக்கும் பொருட்டும் எனக்கு ஒரு வியாச பத்திரம் அளித்திருக்கின்றார். அது சம்பந்தமான விஷயங்களை அடுத்தமுறை வெளியிடுவேன்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

கே. வி. வெங்கட்டரமணையர்,
Government School of Art, Calcutta.

மனிதனது எழுகூறு.

[முன்தொடர்ச்சி.]

இவ்வுலகில் சகலத்தையும் விளக்கிக்கொண்டிருக்கும் சூரியனுடைய ஒளி ஒன்றாயிருந்தும் அது புகுந்துவரும் உபாதி பேதங்களினால் அது தெளிவிலும் குணத்திலும் சக்தியிலும் பலவித விகற்பங்களுடன் வெளி வருகின்றது. ஒரு கண்ணாடிக்குள் ஊடுருவிப் பாய்ந்து வெளிவரும் கிரணமானது அக்கண்ணாடியின் குணத்தைப் பொறுத்து விகற்பப்பட்டு வருகின்றது கண்ணாடி தெளிவானதாயிருந்தால் ஒளியும் ஒரு விகற்பமுமடையாமல் சுயமாய்ப் புறப்படுகின்றது. கண்ணாடி அழுக்குப்படிந்திருந்தாலும், முரடாயிருந்தாலும், மங்கலா யிருந்தாலும், பருக்கனா யிருந்தாலும், பல நிறங்கள் பொருந்தியிருந்தாலும் அதனுள் புகுந்து வரும் ஒளி மங்கியும் பல நிறமாயும் தெரிகின்றது. அதுபோல் சகல மனிதர்களிடத்தும் உள்ள ஜீவாத்துமா ஒன்றாயிருந்தும் அதன் ஒளி வெளி வீசிப் பிரகாசிக்க வரும்பொழுது ஸ்தூல உபாதி வழியாய் வரவேண்டி யிருப்பதினால் அவ்வுபாதியின் குணத்தையும் சக்தியையும் பொறுத்து அது பிரதிபலிக்கின்றது. மனிதர்களில் விவேகி, மூடன், பண்டிதன், பாமரன், மேதாவி, பேதை, யென்னும் வித்தியாசமெல்லாம் அவர்களின் ஜீவாத்துமா புறத்தில் தொழில் செய்வதற்குப் பெற்றிருக்கும் கருவியாகிய ஸ்தூல உபாதிகளின் குண விசேஷங்களினாலேயே யல்லது வேறலல. காம சுபாவம் சுத்தமாயும் ஸ்தூல உபாதியைக்கட்டும் அணுக்கள் பருக்கனல்லாதவைகளாய் மிருதுவாகவும் அவ்வுபாதியின் கட்டுபபாடு ஒழுக்கமாயும் இருக்குமானால் ஜீவாத்துமாவின் ஒளியானது இவ்வுபாதிகளைப் பிரேரேபித்துப் புறத்தில் தொழிலாகப் பிரதிபலிக்கும பொழுது அத்தொழில் யாவரும் வியக்கும்படி வெகு உன்னதமாயும் அதியற்புதமாயுமிருக்கும். ஜீவாத்துமாவானவன் மண் பிண்ட மனிதனாகிய தன்னுடைய வெளித்தோற்ற உருவத்தினுடைய சாதாரணமான தினசரி லௌகீக வாழ்க்கையில் தன்னுடைய சக்திகளை வெளியாகத் தோற்றச் செய்யும் முயற்சகளில் ஏற்றத் தாழ்வாகப் பலிதமானவைகளைத் தான் நாம் "அதிமேதைப் பிரசன்னங்கள்" எனறு சொல்லுகின்றோம். இங்கிலீஷில் இவைகள் "ஜீனியஸ்" (Genius) தோற்றங்கள் அல்லது பிரகாசங்கள் என்று சொல்லுவார்கள். தெய்வப்புலமை யென்றும் வரப்ரசாதம் என்றும் சொல்லுவதும் இதே. ஒருவனுடைய ஜீவாத்துமாவுக்கும் மற்றொருவனுடைய ஜீவாத்துமாவுக்கும் சாராம்சத்திலும் வஸ்துவிலும் வித்தியாசமே யில்லை. ஆனால் ஒவ்வொரு ஜீவாத்துமாவின் பிரசன்னமானது அந்த ஜீவாத்துமா குடியிருக்கும் மண் பிண்டக் கட்டிட

ஒழுங்கையும் அக்கட்டிடத்திற்காய வஸ்துவின் குண விசேஷத்தையும் பொறுத்திருக்கின்றது. அசித்தியமான ஒரு மனிதனைப் பெரியவனாக்குவதும் மற்றொருவனை மதிகெட்ட மடையனாக்குவதும் ஸ்தூல தேகமாகிய கூட்டின் குணமும் கட்டுப்பாடும், உண்மையாகிய அகத்து மனிதனுடைய ஒளியை வெளியில் செலுத்தித் தோற்றுவிக்க மூளையும் தேகமும் தகுதி பெற்றிருப்பதும் அல்லாததுமே யன்றி வேறில்லை. இத்தகுதி வாய்ப்பதும் இல்லாததும் கர்மத்தின் பலனே. சற்கருமங்களினால் ஜீவாத்துமாவானவன் தன்னுடைய இயல்புகளை நன்றாய்த் தோற்றச் செய்யும்படியான உத்தம தேகத்தையும் பாபகருமங்களினால் தன்னுடைய வல்லமைகளைப் பிரகாசிக்க வொட்டாமல் தடைப்படுத்தி விடும்படியான கருவிகள் பொருந்திய அதம தேகத்தையும் பெறுகின்றான்.

ஸ்தூல உபாதியை வீணை, சுரமண்டலி முதலாகிய வாத்தியக் கருவிக்கும் ஜீவாத்துமாவை இசைக் கருவிகளின் தந்திகளின் மேல் விரல்களை ஓட்டி நாதகீத மெழுப்பும் வித்தகனுக்கும் ஒப்பிடலாம். இனிமையான நாதகீதத்தைக் கொடுக்கும் இயல்பு வீணையிடத்திருக்கின்றது. வித்தகன் எவ்வளவு சாதுரியவானா யிருந்தாலும் அவன் கையிலுள்ள வீணை ஒடிந்து போயிருந்தாலும் பழுதுபட்டிருந்தாலும் அல்லது செவ்வையாய்ச் செய்யப் படாமலிருந்தாலும் அவன் அவ் வீணையினின்றும் தோஷமற்ற இனிய வண்ணம எழுப்புதல் முடியாத காரியமாகும். அதுபோல் கர்மானுசாரமாக ஸ்தூல தேகத்தைப் பிரேரித்துக் கிரியை செய்யும் ஜீவாத்துமாவினிடத்து தேகமானது அதி மேன்மையானதாகவாவது அல்லது உடைந்த வீணையைப் போன்று சுத்த உபயோகமற்றதாகவாவது அல்லது இவ்விரண்டு தன்மைக்கும் மத்தியதரமானதாகவாவது வந்து பொருந்தும் பிறவிப்பேதைகளுக்கு மூளை மிகச்சிறுத்து உடைந்த வீணையைப்போன்றிருப்பதால் அத்தேகத்துள்ளிருக்கும் ஜீவன்செய்யும் தொழில் பிரசன்னமாகாமலிருக்கின்றது.

ஜீவன் முன் ஜென்மங்களில் செய்தகருமங்களினால் அபிதத்துவமாகிய ஜீவாத்துமாவின் பிரசன்னங்களுக்கு அவன தொழில் செய்யவேண்டி யிருக்கிற கருவியாகிய ஸ்தூலதேகம் மூளைமுதலியவைகளால் இப்படிப்பலவிதமான வரையறுப்புக்களும் நெருக்கங்களும் உண்டாகின்றனவென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால மனிதடனித்துத்தாழ்ந்த மனசின் செயல்களைத்தொடர்ந்து பார்ப்பதில்நமக்குக்கஷ்டமிராது. புத்திசாதுரியம், மனோதிடம், அறிவின்கூர்மை, விவேகம், சூழ்ச்சி, நுண்ணறிவு என்றுசொல்லும் இவைகள் எல்லாம் அந்தச்சிறு மனசின் பிரசன்னங்களேயாம். இவைகள் தெய்வப்புலமையென்றும் வரப்பிரசாதம் என்றும் அடிக்கடி சாதாரணமாய் ஜனங்கள் சொல்லும் அவ்வளவு உன்னதமான நிலைவரையும் போகும். பிறவியிலேயே சுயமாய் வராமல் கல்விப்பயிற்சியினாலும், புத்திகூர்மையி

னலும் வரும் இக்லையை ஹெலேநாம்பாள் போலித் தெய்வப்புலமை யென்றும் செயற்கைத்தெய்வப்புலமைஎன்றும் சொல்லுகின்றனள். எவ்வளவு உன்னதமான விவேகமாயினும் அதனுடன் காமக்கூறுகளாகிய காமம், குரோதம், செருக்கு, வீம்பு, டம்பம், மமதை, அகங்காரம், தன்னயம், பிறநயங்கருதாமை முதலியவைகள் கலந்திருக்குமாயின் அது கீழ்மனசின் பிரசன்னமென்பதே துணிபு.

மனிதர்கள் இப்பொழுது வந்து நிற்கும் பரிநாமவிகசிதநிலையில் சுத்தமனசு அல்லது விஞ்ஞானம் வெகு அருமையாய்த்தான் பிரசன்னமாகும். எப்போதாவது ஒருகாலத்தில் அபூர்வமாய் அந்த அதிமகத்துவமான இடத்திலிருந்து ஒளி கீழிறங்கி மின்போல் பளீரென மின்னி நாம் இருக்கும் அந்திவெளிச்சத்தைத் துலக்கிப் பிரகாசம் பண்ணுகின்றது. இப்படிப்பட்ட மின்னொளிகளைத்தான் உண்மையான தெய்வப்புலமை யென்று பிரம ஞான சங்கத்தவர்கள் சொல்லுவார்கள். வாஸ்தவமான தெய்வப்புலமை பிரசன்னமாவதற்கு மனம், வாக்குக் காயம் என்னும் திரிகரணசுத்தி இன்றியமையாதது.

இப்பூவுலகத்தில் ஜீவித்திருக்கும்பொழுது காமமும்கீழ்நோக்குமனசும் ஒன்று சேர்ந்து காமமனசு என்று பெயர் கொண்டு ஸ்தூலதேகத்தில் மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பிரேரித்துக்கொண்டு ஸ்தூலஉபாதியைக் கருவியாய் வைத்துக்கொண்டு இந்த ஸ்தூலப் பிரபஞ்சத்தில்தொழில் செய்கின்றது என்று முன்னமே சொன்னோம். இந்தக் காமமனசு மனிதனுக்குள் சம்சாரி. இதை வியாவகாரிக அகங்காரம் என்றும், பாச அகங்காரம் என்றும், அகங்காரக் கிரந்தி யென்றும், தேகாபிமானி யென்றும், அசுத்த அகங்காரம் என்றும், அநித்தியஅகங்காரம் என்றும் அத்தியாசி யென்றும், பலவிதமாய்ச்சொல்லுவார்கள். கீழ் நான்குகூறுகள் ஒன்று கூடிய சதுஷ்கமானது "சாயை" அதாவது "பிம்பம்," "நிழல்". இந்த விம்பமானது தன்னை மற்ற பொருள்களினின்றும் பிரித்து வேறுபடுத்தித் தன்னை "நான்" என்று அபிமானித்துத் தனித்து நோக்கும் சிறப்பைக் கீழ் மனசு கொடுக்கின்றது. அது அறியும் சுபாவம் பெறுகின்றது; தான் வேறு, மற்றைச் சகல ஆன்மாக்களும் வேறு என்று பிரித்தறிகின்றது; இப்படித் தான் தனி, வேறு என்று உணரும் பிராந்தியினால் மருளடைந்து, புலன்களால் தான் அறியக்கூடிய சகலத்திற்கும் அப்பால் உள்ள ஏகத்தை அது அனுபவமாயறியாமற் போகின்றது. ஸ்தூல பிரபஞ்சத்தின் உண்மை போல் தோன்றும் காக்ஷிகளின் பளபளப்பால் வலிந்து கவரப்பட்டும், காமசலனங்கள் ஆசாபாசங்கள் முதலிய பிரவாகங்களினால் இங்குமங்கும் உந்தப்பட்டும், உலகத்திலுள்ள சகல அநித்தியப்பொருள்களால் வலிந்து இழுக்கப்பட்டும் தான் அமிழ்ந்த முழுகியிருக்கும் இன்பத் துன்பப் புயல்

களின் கொந்தளிப்புக்களினால் செவிடுபட்டும் குருடுபட்டும் இந்தச் சிவனாகிய தாழ்ந்த மனசு தனது பிறப்பிடத்தின் சுத்தமும் தெளிவும் சாந்தமும் பொருந்திய மகிமைப் பிரகாசத்தை மறந்து சாந்தியைக் கொடுப்பதற்கு பதிலாகக் களிப்பைக் கொடுக்கும் குழப்பத்திற்குள் விழுந்துகொள்ளுகின்றது. இந்தத் தாழ்ந்த மனசு தான் நமக்குள் உள்ள மிருக சுபாவத்திற்கும் இந்திரியங்களுக்கும் சந்தோஷத்தின் முடிவான தீர்மானத்தைக் கொடுக்கின்றது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஏனெனில் ஒருதரம் அனுபவித்த சுகத்தை மறுபடியும் நினைத்துப் பார்த்து அதைப் பின்னும் தேடி அடையும் வகையறியச் சக்தியில்லாத உணர்ச்சி என்ன உணர்ச்சி? மனோராச்சியஞ் செயல், மனக்கோட்டை கட்டல், விழிகனவு காணல், மனோகற்பனை யென்னும் அதி ரம்மியமான வர்ணங்களும் மனோசிருஷ்டி யென்னும் அதி சூக்ஷ்ம சக்தியுமில்லாத போது களிப்பு, சந்தோஷம், ஆனந்தம், பரவசம் என்பதெங்கிருக்கின்றது? தாழ்ந்த மனசில்லாவிடின் உணர்ச்சி உணர்ச்சி மாத்திரமாகவேயிருக்கும்.

அந்தக்கரணம் என்னும் ஜீவனை இவ்வுலகத்துடன் காமக்குரோதாதிகளைப் பார்க்கினும் அதிக இறுக்கமாய்ப் பந்திக்கும். இன்னும் அதிக பலமான தளைகள் இருக்கின்றன. அத்தளைகள் ஐசுவரிய வாஞ்சை, கீர்த்தி விருப்பம், யசஸ் வேட்கை, புகழ் விழைவு, உச்சபத இச்சை இவைகளால் தொடுக்கப்படுவன. இவ் விழைவுகள் இராஜாங்கத்தில் அமைச்சு முதலிய பெரிய அதிகாரத்தைக் கருதி எழுந்ததாயினும் சரி அல்லது கல்வித் திறத்திலும் ஆராய்ச்சியிலும் மதி வல்லமையிலும் அதி உன்னத சிறப்பெய்த வேண்டி உண்டாயினுஞ் சரி அவைகள் ஜீவனைப் பிரபஞ்சத்துடன் நெருக்கிப் பந்திக்கும் பாசங்களே. எத்தொழிலும் தன்னயங் கருதியாவது புகழ விரும்பியாவது அல்லது இப் புருஷன் தான் இவ்வரிய காரியத்தைச் செய்து முடித்தான் என்று பலருந் தெரியவேண்டுமென்னும் இச்சையுடனாவது அல்லது அகங்கார மமகாரத்துடனாவது எதுவரை செய்யப்படுகின்றதோ; எல்லாச் சீவர்களையும் தானாகப் பாவியாமல் தான் மற்றவர்கள் எல்லோரையும் பார்க்கிலும் வேறு என்று கருதும்படியான எண்ணம் அதி சூக்ஷ்மமாயினும் இதயத்தின் மூலை முடக்குக்களில் அதி தூரத்தில் ஒடுங்கி ஒளித்து எதுவரையிருக்கின்றதே; அதுவரைமேம்பாடு விழைவு எவ்வளவு மகத்தான விஷயத்தைப் பற்றினதாயினும், செய்யும் தர்மங்கள் எவ்வளவு தூரமெட்டினும், செய்து முடிக்கும் அருஞ்செய்கை எவ்வளவு உன்னதமாயினும், அந்தக்கரணம் காமத்தினால் மாசு அடைந்து இருக்கின்றது. அதன் உற்பத்தி ஸ்தானம் எப்படி சுத்தமோ அப்படி சுத்தமில்லை.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி.]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித்தமராக்கோளல்."

1873-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் ஹேலேநாம்பாள் ருஷியாவைவிட்டு நீங்கிப் பாரிஸ் நகரத்திற்குச் சென்று சிறிதுகாலம் அவ்விடமிருந்து அப்பால் அமெரிக்காவுக்குப்போயினள். அவ்விடத்தில் வேர்மாண்ட் அல்லது பசுமலை யென்னும் மாகாணத்தில் எட்டி (Eddy) என்னும் பெயர்கொண்ட இரு சகோதரர்களின் மனையில் 1874-ம் வருஷம் அக்டோபர் மாதம் இப்பொழுது பிரமஞான சங்கத்தின் அக்கிராசனுதிபதியும் அச்சங்கத்தை ஆதியில் ஸ்தாபித்தவர்களில் ஒருவருமாகிய கர்னல் ஆல்காட் என்னும் நாமந்தரித்த பெருமகனுடைய பழக்கம் உண்டாகியது. மேற்சொன்ன எட்டி (Eddy) கள் மீடியங்கள் என்னும் பரமிய உபகாரணிகள். அவர்கள் மனையில் வெகு விசித்திரமான பரமியக் காக்ஷிகள் நடந்துவந்தன இவைகளை ஆராய்ச்சிசெய்து அவைகளின் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னுங் கருத்துடன் கர்னல் ஆல்காட் அம்மனைக்குப் போயிருந்தார். நமது மாது சிரோமணியாகிய ஹேலேநாம்பாளும் அம்மனைக்குச் சென்றதில் இவ்விருவருக்கும் பழக்கம் உண்டாகியது. அப்பால் அவள் கருணையினல் கர்னல் ஆல்காட் ஞானவிஷயமான சங்கதிகள் பல அறிந்து விரக்தியடைந்து தமது உத்தியோகத்தைத் துறந்து இவ்வம்மணியின் குருநாதனுக்குத் தொண்டு புரிந்து அவருக்குச் சீஷனுகி ஞான விசாரணையில் தமது வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்று துணிந்துகொண்டனர், இவர் அமெரிக்கா தேசத்து இராணுவத்தில் தளகர்த்தராயிருந்தார். சண்டை நடந்த காலத்தில் யாவரும் மெச்சும்படி வேலை செய்தார்.

1875-ம் வருஷம் அக்டோபர்மாதம் ஹெலெநாம்பாளும் கர்னல் ஆல்காட்டும் சேர்ந்து பிரமஞானசங்கத்தைப் புதுயார்க் (New York) என்னும் நகரில் ஸ்தாபித்தார்கள். இச்சங்கத்திற்கு கர்னல் ஆல்காட் அக்கிராசனாதிபதியாயினர். ஹெலெநாம்பாள் இலிகித காரியதரிசி (Corresponding Secretary) என்னும் சிறிய உத்தியோகத்தை வகித்துக்கொண்டனள்.

அமெரிக்காவில் இவளை பண்டினவர்களில் வி. கு. ஜட்ஜ் என்பவர் ஒருவர். இவர் அவளுடைய அனேக அதிசய காரியங்களைப் பற்றி எழுதியிருக்கின்றனர்.

இவர் முதல் ஹெலெநாம்பாளிடம் போனபோது அவளுடன் அனேக ஜனங்களிருந்தார்கள். இவர் போன உடன் இவர் மனதில் நினைத்த எண்ணங்களையும் இவருடைய இரகசிய நடவடிக்கைகளையும் இவரைப்பற்றி முன் ஒன்றுந்தெரியாத அவள்சொல்லினள். இவருடன் புதுயார்க்கில் வாசிக்கவந்து அவ்வூரிலேயே தன்னுடைய ஜீவதசையைக்கழிக்கவேண்டுமென்ற தீர்மானத்துடனிருந்த ஸாண்ட்விச் (Sandwich) தீவின் சுதேசி ஒருவரும் சென்றிருந்தனர். இம்மனிதன் சிறுபிள்ளை-கலியாணமாகாதவன். அக்காலத்தில் கலியாணஞ் செய்துகொள்ள எண்ணமேகொள்ளாதவன். அவனைப்பார்த்து ஹெலெநாம்பாள் ஆறு மாதங்களுக்குள் அவன் கலியாணம் செய்து கொண்டு அப்பால் அமெரிக்கா கண்டத்தைக்கடந்து வெகுதூரம் கடல்யாத்திரை செய்வானென்றும் சொல்லினள். அப்பொழுது அவன் அதெல்லாம் தப்பு என்றும் அந்தமாதிரி எண்ணங்களே தனக்குக்கிடையாது என்றும் சொல்லி கேலியாக நகைத்தான். ஆனால் விதியை வெல்ல அவனால் முடியவில்லை. சிலமாதங்களுக்குள் அவனுக்கு அவனுடைய சுதேசத்தில் ஒரு உத்தியோகம் ஏற்பட்டு அதற்காக அவனுக்கு அழைப்பு வந்து அமெரிக்காவைவிட்டு நீங்கிப் புறப்பட்டுப்போக நேரிட்டது. மேலும் அவன் அமெரிக்காவை விட்டு நீங்குவதற்குமுன் ஹெலெநாம்பாள் அவனுக்கு வருங்காரியஞ் சொல்லும்பொழுது அமெரிக்காவிலில்லாது இப்பொழுது நூதனமாகவந்த ஒரு பெண்ணையும் மணஞ் செய்துகொள்ளும்படி நேரிட்டது.

மறுநாள் ஜட்ஜ் என்பவர் ஹேலேனாம்பாளிடம் ஒரு பரீட்சை பார்க்க வேண்டுமென்று கருதித் தன்னுடைய சினேகிதனொருவனுடைய குமஸ்தாவைக்கொண்டு ஹேலேனாம்பாள் எப்பொழுதும் பார்த்திராத செத்துப்போய் திராவகத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பழையகாலத்து நூதனமான வண்டு ஒன்றைக் காகிதத்திலும் துணியிலும் சுற்றி ஒரு மூட்டையாகச் செய்து ஹெலெனாம்பாளுடைய விலாசம் எழுதித் தபால் மார்க்கமாய் அனுப்பி வைத்தார். இவர் இந்த மூட்டையைக் கையில் தொடவு மில்லை. எந்தத் தபாலாபிசில் அந்த மூட்டை கொடுக்கப்பட்டதோ அதுவும் அவருக்குத் தெரியாது. ஒருவரிடத்தும் அவர் இவ்விஷயம் பிரஸ்தாபித்ததுமில்லை. அடுத்த வாரம் இவர் ஹேலேனாம்பாளிடம் போனபோது அவள் தனக்கு அந்த விநோதமான வண்டை யனுப்பினதற்காக வந்தனம் கூறினள். அவர் தனக்குஒன்றுந்தெரியாதது போல் நடித்தார். அதற்கு அவள் அந்த நடிப்பில் பிரயோசனமில்லை யென்றும் யாரைக்கொண்டு அதை மூட்டையாகக்கட்டி எப்படி அது அனுப்பப்பட்டதோ அதை யெல்லாம்சொல்லி முடித்தனள்.

ஒருநாள் கர்னல் ஆல்காட்டின் சினேகிதர் ஒருவர் போஸ்டன் (Boston) நகரத்திலிருந்து ஒரு பிரபல நூலாசிரியனுடைய புகைப் படத்தைக் கர்னல் ஆல்காட் பார்வைக்குத் தபால்மார்க்கமாக அனுப்பி அதைப் பார்த்த பிறகு உடனே திருப்பியனுப்பிவிடும்படி கேட்டுக்கொண்டனர். அப்படியே கர்னல் ஆல்காட் மறுதினம் தபாலில் திருப்பி யனுப்பிவிட்டனர். ஜட்ஜ் என்பவரே அதைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டு வந்தனர். இரண்டு மூன்றுநாட் கப்புறம் அப்படத்திற்குப் பிரதி வேண்டுமென்று ஹேலெனாம்பாளை ஜட்ஜ் கேட்டார். ஹேலேனாம்பாளால் இது செய்வது அசாத்தியம் என்று அவர் எண்ணினர். அசல் படம் இல்லாததால் பார்த்துப் பிரதிசெய்வதற் கில்லை. ஆகையால் ஹேலேனாம்பாளுடைய சக்தி இவ்விஷயத்தில் தடுமாறிப் போகுமென்றே யாவரும் உறுதியாய் நம்பினார்கள். ஆனால் ஹேலேனாம்பாள் ஒரு கடுதாசியை யெடுத்து அதன் மேல் தன்

கையை வைத்து உடனே யெடுத்தாள். அக் காகிதத்தில் கேட்ட படத்தின் பிரதியிருந்தது. இதைக் கர்னல் ஆல்காட் வாங்கிப் பார்த்துத் தான் அப்பொழுது வாசித்துக்கொண்டிருந்த புஸ்தகத்திற்குள் வைத்துக் கொண்டு நித்திரை செய்யப் போய்விட்டார். மறுநாட் காலை அந்தக் காகிதத்தைப் பார்க்க அதில் முதல்நாள் கண்ட உருவம் சுத்தமாய் மறைந்து போய்விட்டது. அடியில் எழுதியிருந்த பெயர்மாத்திரம் இருந்தது. சில நாட்களுக்கப்பால் இக் காகிதம் கர்னல் ஆல்காட்டின் அறையிற் கிடந்ததைக் கண்டு ஜட்ஜ் எடுத்துக் கொண்டுபோய் ஹெலேநாம்பாளிடங் காட்டி அந்த உருவம் மறுபடியும் தோன்றும்படி செய்யவேண்டுமென்று கேட்டனர். ஹெலேநாம்பாள் உடனே அதன் மேல் தன் கையை வைத்தாள், பழையபடி உருவந் தோற்றிற்று. இவ்வுருவம் மறுபடி எப்பொழுதும் மறையவில்லை.

ஒரு நாள் சாயந்திரம் சுமார் நான்கு மணி யிருக்கும். கர்னல் ஆல்காட்டின் சிநேகிதர் ஒருவர் அவ்விடம் கொண்டுவந்த ஒரு புஸ்தகத்தை ஜட்ஜ் வாங்கி வாசித்துக் கொண்டிருந்தனர். ஹெலேநாம்பாள் அப்பொழுது ஆறு அடி தூரத்திற்கப்பால் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தாள். ஜட்ஜ் அப்புஸ்தகத்தின் பெயரை வாசித்துவிட்டு அப்பால் நூலைவாசிக்க ஆரம்பிக்கும்பொழுது ஆகாயத்தில் ஒரு மணியடித்த சத்தம் கேட்டது. என்னவென்று நிமிர்ந்து பார்க்க ஹெலேநாம்பாள் இவரைக்குறிப்பாய்ப் பார்த்து "நீ படிப்பது என்ன புத்தகம்" என்றாள். இவர் புஸ்தகத்தில் பெயரைப் பார்த்துச் சொல்லப்போனார். அப்பொழுது முன் சுத்தமாயிருந்த தலைப்பில் மையினால் எழு வரிகளில் அப்புஸ்தகத்தின் சுபாவத்தையும் அதை வாசிப்பதால் வரும் தீங்கையும் எழுதி யிருந்தது. எழுதியிருந்த மையும் ஈரமாயிருந்தது. இவர் முதல் புஸ்தகம் எடுத்துப் படிக்க ஆரம்பித்த போது இந்த மை யெழுத்து அங்கு சுத்தமாயில்லை.

ஹெலெநாம்பாள் சாதாரண உலகவழியாயல்லாமல் அற்புதமாய் ஆகாசமார்க்கமாய்த் தருவிக்கப்பட்ட பொருள்களை

ச்சுற்றிலும் ஒருவிதமான இனிமையான மணம் சிறிது கால மாவது அதிககாலமாவது வீசிக்கொண்டிருக்கும். ஆனல் இவ் வாசனை எப்பொழுதும் ஒருபடித்தாயிருப்பதில்லை. இதைப் பற்றி ஜட்ஜ் பின்வருமாறு சொல்லுகின்றார். "ஒருகாலத்தில் அந்தவாசனை சந்தனக்கட்டை வாசனையுடன் ரோஜா, அத்தர் வாசனை போன்று எனக்குத்தோன்றினமணத்துடன் கலந்து வருவதுபோன்றிருக்கும்; மற்றொருகாலத்தில் எனக்குத்தெரி யாத ஏதோ கிழக்குதேசங்களிலுள்ள ஒருவித மணமாயிருக் கும்; வேறொருகாலத்தில் ஆலயங்களில் போடும் சாம்பிராணி த்தூபத்தின் வாசனைபோன்றுவரும். ஒருநாள் அவள் என்னை நோக்கி அந்தச் சுகந்தத்தை மறுபடியும் நுகர இஷ்டமாவெ ன்று வினவினள். நான் ஆம் இஷ்டந்தான் என்று சொல்லவும் அவள் எனது கைக்குட்டையை வாங்கித் தன் கையில் சற்று வைத்து அப்பால் என்னிடம் அதைத்திருப்பிக் கொடுத்தாள். அப்பொழுது அந்தக்குட்டை முழுவதும் நான் முன் நன்கறிந் திருக்கும் வாசம் நிறைந்திருந்தது. அப்பால் அவள் கையில் முன்னமே ஏதாயினும் தடவியிருந்து அது கைக்குட்டையில் ஒட்டிவந்ததன்று எனக்காண்பிக்கும்பொருட்டு அவளுடைய இருகைகளையும் சோதிக்க எனக்கு அனுமதி கொடுத்தாள். அவள் கைகளில் சுத்தமாய் ஒரு வாசனையுமில்லை. அப்பால் அவள் கைகளை நன்றாய்ச்சோதித்து ஒருவாசனைத் திரவியமும் அங்கு மறைந்திருக்கவில்லையென்று நான் மனப்பூரணமாய் த்துணிந்தறிந்துகொண்டபிறகு அவள் ஒருகையிலிருந்து ஒரு விநோதமான பலத்த சுகந்தம் கிளம்பவும் மற்ற கையிலிருந்து சாம்பிராணித் தூபப்புகைகனத்த அலைகளாகச்சுழன்று சுழன்று மேலெழும்பிப்போகவும் நான் கண்டேன்".

ஒரு நாள் பரோபகாரமாக அளவிறந்த தர்ம காரியங்கள் செய்பவளாகிய எலிஸபெத் தாம்சன் என்னும் மாது ஹேலேநாம் பாளைப் பார்க்க வந்தனள். அவள் விடை பெற்றுக்கொண்டு போகும் பொழுது தனக்கு ஞாபகார்த்தமாகவும் இரட்சாபந் தனமாகவுமிருக்கும்படியாக ஹேலேநாம்பாள் அணிந்திருக்கும்

பொருள்களில் யாதேனும் ஒன்றைத் தன்னிடத்தில் சிலகால மிருக்கும்படி கொடுக்க வேண்டுமென்று இரந்தனள். அப்பொழுது ஹெலேனாம்பாள் தன்னுடைய விரலை உருவி "இதோ இந்த மோதிரத்தை வைத்துக் கொள்' என்று கொடுத்தாள். அம்மாது அதை வாங்கி அதிலுள்ள ரத்தினங்களை அதிசயமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது அவ்விடத்தில் கூடவிருந்த ஜட்ஜ் என்பவர் ஹெலேனாம்பாள் விரலைப் பார்க்கவும் அதில் மோதிரம் முன்னிருந்த மாதிரியே யிருந்தது. அதிசயித்துப்பரோபகாரமாதிடம் பார்க்கவும் அவளிடத்திலும் அதே மாதிரியான மோதிரம் இருந்தது.

அம்மாது இச்சித்தைக் கவனியாமலே தனக்குக் கிடைத்த மோதிரத்தை கைக்கொண்டு போய் கொஞ்சகாலத்திற் கப்பால் மறுபடியும் கொண்டுவந்து ஹெலெனாம்பாளிடம் கொடுத்துவிட்டனள். அப்பொழுது ஹெலேனாம்பாள் அதைவாங்கித் தன்னிடமிருந்த மோதிரத்தையும் இதையும் வைத்துக்கொண்டு இவைகளில் ஒன்று மாயமானது; அது எதுவென்றுசொல் பரர்ப்போம் என்று ஜட்ஜ் என்பவரைக் கேட்டாள். அவர் எது மாயம் எது உண்மையென்று சொல்லமுடியாமல் விழித்துக்கொண் டிருக்கும்பொழுதே பரோபகாரமாது திரும்பிக கொண்டுவந்து கொடுத்த மோதிரத்தைத் தான் விரலுக்குள் செலுத்தினள் அது அவள் முன்னமே அணிந்துகொண்டிருந்த மோதிரத்தில் மோதவும் அதற்குள் பிரவேசித்து இரண்டும் ஒன்றாகக் கலந்துவிட்டன.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளில்

பரீக்ஷை ஸ்தலங்கள்	ஆங்கில பாட்சாலைப்			
	பீ. ஏ. தேறின நம்பர்கள்	மொத்தம்	எப். ஏ. தேறின நம்பர்கள்	மொத்தம்
1. சென்னை	63, 68, 72, 74.	4	50, 51, 55, 58, 62.	5
2. கும்பகோணம்	...	...	45, 47 48, 49, 50, 52.	6
3. திரிசிரபுரம்	47, 48, 49.	3	40, 43, 44, 45.	4
4. திருவனந்தபுரம்	11.	1	10.	1
5. கூடலூர்	...	...	5.	1
6. சேலம்	...	...	9.	1
7. கோயமுத்தூர்	...	...	21, 22.	2
8. புதுக்கோட்டை	...	...	...	...
9. மதுரை	...	...	...	...
10. திருநெல்வேலி	...	...	45, 46, 48, 49, 52, 56.	6
11. நாகர்கோயில்	...	...	17.	1
தேறினவர்கள் 84.	...	8		27
மொத்தம் வந்தவர்கள் 302	...	10		57

☞ குறிப்பு:—1903ஹு நடந்த பரீக்ஷைக்கு வந்தவர் 247.

தமிழ்ச்சங்கம் ஆபீஸ்,
மதுரை,
18—2—05.

தேறினவர்களின் விவரம்.

பரீக்ஷைகளில் தேறினவர்கள்.			தனித் தமிழ்ப் பரீக்ஷையில் தேறினவர்கள்
மெட்ரிகுலேஷன் தேறின நம்பர்கள்	மொத்தம்	பரிசு பெறத்தக்கவரின் பெயரும், பரிசின் தொகையும்	பரிசு பெறத்தக்கவரின் பெயரும் பரிசின் தொகையும்
4, 13, 27, 28, 30.	5	P. பொன்னுரங்க முதலியார் (பீ.ஏ.) பிரஸிடென்ஸிகாலேஜ் முதல் பரிசு ரூ 50 (தங்கப் பதக்கம்)	
13, 20, 21, 22, 31.	5	P. தாவுத்ஸா (மெட்ரிகுலேஷன்) நேடிவ் ஹைஸ்கூல் 2-ம் பரிசு ரூ 25.	
3, 4, 9, 12, 13, 15, 17, 21, 22, 23, 30.	11	வி. முத்துச்சாமிஐயர் (எப்.ஏ.) எஸ். பி. ஜி. காலேஜ் முதல் பரிசு ரூ 40. (தங்கப்பதக்கம்)	4, 5, 7. எம். வெங்கடசாமி நாடார் 2-ம்பரிசு ரூ 30.
1, 2, 3.	3	எலிஸபெத்சாமியூல் (பெண்) மகாராஜா அவர்கள் காலேஜ். முதல்பரிசு ரூ 30. (வெள்ளிப் பதக்கமும் பணமும்.)	
1, 2.	2		
1, 2, 3, 4, 5, 6.	6	ஏன். சீதாராமராவு (மெட்ரிகுலேஷன்) முனிசிபல் காலேஜ் ரூ 20. (3-ம் பரிசு.)	
15.	1		
12.	1		
1, 3, 5, 9, 14, 15, 18, 34, 39, 41, 49.	11		1. ஏ. கோபாலையர் முதல்பரிசு தங்கப் பதக்கம் ரூ 50.
23, 25, 26.	3		
6.	1		
	49		4
	235		8

பரீக்ஷை தேறியவர் 114; பரிசுபெற்றவர் 10.

P. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

புத்தகக்குறிப்பு.

தமிழகம் :— இப்பெயர் புனைந்த மாதத்தமிழ்ப் பத்திரிகை தஞ்சை மாநகரிற் சென்ற மாதந்தோன்றி யிருப்பதை அறிய நம் தமிழ்நாட்டார் அனைவரும் சந்தோஷிப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை, அதன்முதல் சஞ்சிகையை நம்பார்வைக்குஅனுப்பியதற்காகப் பத்திராதிபர் அவர்களுக்கு அகமகிழ்ந்து நன்றி பாராட்டுகின்றோம். முன்னரே பல மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இருக்கும்பொழுது இந்நூதன பத்திரிகை ஏற்பட்டது அநாவசியமன்றோவென்று சிலர் வினவலாம். இப்பத்திரிகையின் நோக்கத்தை ஆய்ந்தறிவோமானால் இவ்வினவுக்கு இடமிராது. ஆங்கிலத்திலுள்ள முக்கிய அரிய விஷயங்களை நம் நாட்டாருக்கு எடுத்துக்காட்டி அறிவுறுத்த வேண்டுமென்பதே இப்பத்திரிகையின் முக்கிய நோக்கம். அதற்கென்றே ஏற்பட்ட பத்திரிகைகள் இதுவரை கிடையா. ஆகையால் இப்பத்திரிகையின் நோக்கம் வியக்கற்பாலதே.இது எளிய நடையில் எழுதப்பட்டு நல்லகடிதத்தில் நன்கு அச்சிடப்பட்டிருக்கின்றது. சந்தாவும் அதிகம் என்று சொல்லுதலொண்ணாது. விஷயங்களும் அறிவுறுத்தத்தக்கவையாகவே இருக்கின்றன. இப்பத்திரிகைக்கு எல்லாம் வல்ல ஈசன் சர்வ மங்களங்களையும் உண்டுபண்ணுவாராக.

பத்திராதிபர்.

பாநுவின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள்.

1. ஸ்ரீமாந் சுந்தரலிங்கபாண்டிய காமயசாமிநாயக்கரவர்கள், சாப்டேர்ஜமீந்தார், சுந்தரவிலாசம், வடக்கு வெளிவீதி, மதுரை, வரவு ... ரூ 25.
2. தண்டலம். ஸ்ரீமாந். முருகேச முதலியாரவர்கள், 64. நாட்டுப்பிள்ளையார்கோவில் தெரு, சென்னை. வரவு ... ... ரூ 10.

ஓர் சந்தேகம்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னு முத்தமிழில் இசைத் தமிழ் நாடகத்தமிழ் என்னுமிரண்டினிலக்கணங்களாகிய பெருநாரை பெருங்குருகு முதலியவும், பஞ்சபாரதீய முதலியவும் இறந்தனவென்பது தெளிவான விஷயமே. ஆயினும், உலகத்தில் இராமாயணம், பாரதம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றைக் கீர்த்தன ரூபமாகச் சில வித்வசிரோமணிகளியற்றியிருக்கின்றனர். அவர்களெவ்விலக்கண முறையைக்கொண்டியற்றியிருக்கின்றனரென்பது புலப்படவில்லை. இராமாயணக்கீர்த்தனை முதலியன இசைத்தமிழ்க்குரியவையன்றோ? சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட சுரவிலக்கணங்கள் முதலியன வடநூலில் நந்தி முதலாயினோர் கூறியவற்றிற்கொத்திருக்கின்றன. சில கைகள் மட்டுந் தமிழ்ப்பெயர்களாக வழங்குகின்றன. இலக்கணம் வேறுபடவில்லை. ஆனால் நாடகத்தமிழ்க்குரிய பரதம் அகத்திய முதலிய தொன்னூல்களுமிறந்தனவென்பதுந் தெள்ளிதே. அப்படியிருக்க, தமிழ் வித்வசிரோமணிகளிலனேகர் தமிழில் இதிகாச புராணங்களைக் கீர்த்தனரூபமாகவியற்றுவது எவ்விலக்கண முறையைக்கொண்டென்பதும் அப்படிப்பட்டவை யெத்தமிழ்க்குரியவை யென்பதும் புலப்படாத காரணத்தாலீண்டெழுதத் துணிந்தேன். மஹாவித்வ சிரோமணிகள் இச்சந்தேகத்தையும் நிவர்த்தி செய்யப் பிரார்த்திப்பல். அன்புகூர்ந்து விடை தருவார்களாக.

சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்,
திருச்செங்கோடு.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

கொப்பூழுக்குக் கீழ்ப்பாகங்களில் சொற்ப வீக்கமாவது வலியாவதிருந்தாலும் சிறு வலிப்புப் போன்ற உணர்ச்சியிருந்தாலும் நீர்க்குண்டிக் காயிலும் ஆசனத்திலும் குத்தலுண்டானாலும் பொஸ்தகக்காய் பலம் 2 இதனை 1-படி வெந்நீருள் பொடித்துப்போட்டு முக்காற் படியாய்க் குறுகக் காய்ச்சி அந்த வெந்நீரில் கம்பளித்துணியை நனைத்துப் பிழிந்து இளஞ்சூடா

யிருக்கும்போது வலியுள்ள விடங்களிலெல்லாம் வேது கொடுக்க வேண்டியது. இதற்கிசையாதபோது ஓர் அகன்ற பாத்திரத்தில் வெந்நீரை விட்டு அதற்குள் ரோகியை உட்காரச் செய்யவேண்டியது. இதற்கின்னுமொரு சுலபமான சிகிச்சையுண்டு:—அதாவது நீரடைப்பால் கஷ்டப்படும்போது ரோகியை ஓர் வண்டியிற் படுக்கச் செய்து வேகமாய் ஓட விடுவதால் தேகங்குலுங்கும் போது நீர்ப்பையும் அதிகமாயலைந்து தானே வெளிப்பட்டுக் குணமாய் விடுகின்றது. இப்படிக் குணமானோர் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அடைப்பால் கஷ்டப்படும்போது வண்டியிலிருந்து சகிப்பது மிக்க பிரையாசை தான், அடைப்பு மாத்திரம் நீங்குவது நிச்சயம்.

பத்தியம்:—அதிக காரமான வஸ்துக்களையும் தித்திப்பு வஸ்துக்களையும் உஷ்ண போசனங்களையும் மாமிசத்தையும் விலக்கவேண்டியது.

சுரங்களுக்கு கஷாயம்.

சீந்தித்தண்டு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், பற்படாகம், கொத்துமல்லி, பன்றிக்கோரைக்கிழங்கு, முத்தக்காசு, சுக்கு இவ்வேழும் வகைக்கு விராகனெடை $1\frac{1}{4}$ (கவ) சிறுக நறுக்கி ஒரு மண்பாத்திரத்திலிட்டு 2 படி தண்ணீர்விட்டு அடுப்பேற்றிக் காற்படியாய்க் குறுக்கிக்கொள்ளவேண்டியது.

உபயோகம்:—பித்தசுரம், வாதசுரம், தாகசுரம், கர்ப்பிணிகளுக்குண்டாகுஞ்சுரம், உட்சுரம், சதா உடல் வெதும்பியேயிருத்தல் முதலியவற்றிற்குபயோகிக்கவேண்டியது.

அளவு:—வேளையொன்றுக்கு அரைக்காற்படிவீதமாகக் காலை மாலை 3 நாள் உட்கொள்ளவும். ஆனால் உட்சுரத்திற்கும் நீடித்த உடல் வெதுப்பிற்கும் குணமாகும்வரை சிலநாள் தொடர்ச்சியாயெடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு:—இந்தக்கஷாயத்தை ஒவ்வொருநாளும் புதிது புதிதாய்ச் செய்து உபயோகிக்கவேண்டியது. 3 நாட்கள் வரை உபயோகிக்கவேண்டின் சரக்கின்நிறையையுக் தண்ணீரின் அளவையும் மும்மடங்குசெய்து கஷாயமிட்டுக் கொள்ளவேண்டியது. எந்த வயதினர்க்கும் உபயோகிக்கலாம்.

கறியுப்புச்சூரணம்.

கொம்மட்டிக்காயைத் தோல விரைநீக்கியிடித்து வடித்தரசம் பங்கு 1, கறியுப்புப் பங்கு 1, பசுப்பால்பங்கு 4 இவைகளில் உப்பை நன்ருய்ப்பொடித்து எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒரு வாயகன்ற பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி மெதுவாயெரித்து அடிக்கடி கிளறிக்கொண்டேயிருந்து நீரெல்லாம் வற்றி உப்பானபோது எடுத்துவைத்துக்கொள்ளவேண்டியது.

உபயோகம்:—அசீரணம், வாயு, பித்தகுன்மம், பித்தவாயு, ஏப்பம், இவைகள் தீரும்.

அளவு:—ஒரு விராகனெடை உப்பைக் கொஞ்சம் புளித்தமோரிலாவது சாதத்தீர்த்தத்திலாவது இளவெந்நீரிலாவது காலையில் மாத்திரம் கால் அரை மண்டலங்கொள்ளவேண்டியது. இச்சாப்பத்தியம்.

பரங்கிப்பட்டை ரசாயனம்.

பரங்கிப்பட்டை பலம் 5 சாதிப்பத்திரி குரோசானியோமம் அதிவிடையம் கிராம்பு ஓமம் சுக்கு மிளகு திப்பிலிவகைக்குப் பலம் $\frac{1}{4}$ (வ) எல்லாவற்றையுஞ் சூரணித்துப் பசும்பால்விட் டரைத்துக் குழப்பி ஒருபடி பசுநெய்யிற் கலந்து அடுப்பேற்றி மெதுவா யெரித்து கருகாமல் ஓயாமற் கிளறிக்கொண்டேயிருந்து நெய்ப்பதமாக வரும்போது சீனிச்சர்க்கரை பலம் 6 போட்டுக் கிளறி யிறக்கி ஒரு கலசத்தில் வைத்துக்கொண்டு உபயோகிக்கவேண்டியது.

உபயோகம்:—வெடிசூலை, மார்புநோய், மண்டைச்சூலை, வாதரோகம், வாய்ச்சூலை இவை முதலிய ரோகங்கட்கு உபயோகிக்கலாம்.

அளவு:— ஒரு சிறிய எலுமிச்சங்காயளவு சாப்பிடுக.

பத்தியம்:— புளி உப்பு நீக்கிக் கடும்பத்தியமாய் 6 நாளிருந்து 7-ம் நாள் எண்ணெயிட்டுத் தலைமுழுகிப் பத்தியத்தை நீக்கவேண்டியது. 6 நாள் இந்த ரசாயனம் போதும். ஒருதடவை யுண்டு குணங்காணுவிடில் கொஞ்சநாள் இடைவிட்டுப் பின்னொருதடவை சாப்பிட்டுக் குணமடையவேண்டியது. ஒருமாதம்வரை இச்சாப்பத்தியமாயிருந்தால் நலம்.

சந்தன மாத்திரை.

மலாக்காசந்தனம் நல்ல வாசனையுள்ளது பலம் 1, சங்கப் பெருநெருப்பிலிட்டு நீருக்கினது பலம் 1 இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டுத் தண்ணீர்வார்த் தரைத்துக் கடலைப் பிரமாணமாக உருட்டி நிழலிலுலர்த்தி யெடுத்துக்கொள்ள வேண்டியது.

உபயோகம்:— நீரடைப்பு, சொட்டுமூத்திரம், அதிமூத்திரம், நீரெரிவு இவைகளுக்குக் கையாளலாம். சீனாக்கற்கண்டு, சீனி, சீரகத்தூள், இம்மூன்றையுஞ் சமமாய்ப் பொடித்துக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு இச்சூரணத்தில் 3 வெருகடியளவும் ஷை மாத்திரையில் 1-ம் சாப்பிட்டுவர வேண்டியது.

பத்தியம்:—அதிககாரம், கிரந்திவஸ்துக்கள், உஷ்ணவஸ்துக்கள் இவை கூடாதன நெடுநாள் சாப்பிடவேண்டும்.

அமிர்த சர்க்கரைலேகியம்.

அமிர்த சர்க்கரை, வெட்டுவேர், விலாமிச்சம்வேர், அமுக்கராவேர், (இதைப்பாலில் வேகவைத்துலர்த்திச்சேர்க்க) நெருஞ்சிவேர், நன்னாறிவேர், முத்தக்காசு, தாமரைவளையம், ஆவிரைவேர்ப்பட்டை, இதின் கொழுந்து, பூ, வித்து, முஷ்டைவித்து, அத்திவித்து, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அசமதாகம், வெள்ளேலம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், குங்குமப்பூ, சாதிக்காய், நல்லசந்தனம், பச்சைக்கர்ப்பூரம், கற்கடகசிங்கி, சிறுநாவற்பூ இவை வகைக்குப்பலம் ½ (இ) இவற்றைச்சூரணித்துச் சூரணங்கண்ட எடைக்குச் சரிசீனிகூட்டிப் பசுநெய் பங்கு 1, எலுமிச்சம்பழம் ரசம் பங்கு 3 இவ்விரண்டையுங்கலந்து முன் சூரணத்தில் விட்டு லேகியபதமாய்ப்பிசைந்து வைத்துக்கொள்ளவேண்டியது.

அளவு:— பெரியவர்கள் புன்னைக்காயளவும், சிறியவர்கள் அதிற்பாதியுமாகக் கால்மண்டலஞ் சாப்பிடவேண்டியது. நெடுநோயாளிகள் அரைமண்டலம் புசிக்கவேண்டியது. காலை மாலை இருவேளையுங்கொள்ளலாம்.

[இன்னும் வரும்.]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலூகா.

சைவ பரிபாஷை.

[முன் தொடர்ச்சி]

நையாயிகர்கள் பிரமையினாலே வியாபிக்கப்பட்ட பிரமையின் சாதனமாவது (1) ஆசிரயமாவது பிரமாணமாகுமென்கிறார்கள்.

அதுவுங் கூடாது. சாதனங்களெல்லாம் பிரமேய மாதலால் பிரமாண மாகாது. பிரமாண மென்னில் தீபாதிகளும் பிரமாண மாகவேண்டி வரும். அப்படியே பௌஷ்கரத்தில் சொல்லியிருக்கின்றது.

கண் முதலான இந்திரியங்கள் தத்தம் விஷயங்களைவிட வேறு விஷயங்களைக் கிரகிக்க மாட்டா; ஆகையால் எல்லாவற்றையும் கிரகிப்பது எதுவோ அதுவே பிரமாணமென்று கொள்ள வேண்டும். அது சிற்சத்திதான். அப்படியே ஆகம வசன மிருக்கின்றது.

சங்கை:—ஆனால் சகல பதார்த்த ஞானமும் புத்தியுண்டானால் உண்டாகவும், இல்லையாகில் இல்லையாகவும் இருப்பதால் அந்நுவய வியதிரேகத்தால் புத்தி சர்வ விஷயங்களையும் கிரகிப்பதால் புத்தியே பிரமாண மாகுமென்னில்

உத்தரம்:—அதுவும் கண் முதலானவை போல் சடமாய் (2) சைதன்னிய மின்மையால் சுக துக்காதி எதுவைக்கொண்டு அறியப்படும் பிரமேயமாயும் இருத்தலால் புத்தி ஒரு பொழுதும் பிரமாணமாக மாட்டாது. அப்படியே ஆகம வசனமிருக்கின்றது.

சங்கை:—(3) பிரமாதா (4) பிரமாணம் (5) பிரமை பிரமேயம் என்னும் இந்நான்கு (6) பிரமா சாமக்கிரியு மிருக்கை

(1) ஆசிரயம்—அடைதற்குரியது.
(2) சைதன்னியம்—அறிவு.
(3) பிரமாதா—அளக்கிறவன்.
(4) பிரமாணம்—அளவு.
(5) பிரமை—ஞானம்.
(6) பிரமாசாமக்கிரி—அறிவுக்குச் சாதனமாயுள்ளது.

யில் பிரமை யுண்டாகிறது. இல்லாவிடில் இல்லையாதலால் பிரமாசாமக்கிரியே பிரமாண மென்னில்

உத்தரம்:—அப்படிச் சொன்னால் பிரமாதா பிரமேய மென்பன முதலான விவகாரமில்லாமற் போகவேண்டும். பிரமாதா முதலானவை தவிர பிரமா சாமக்கிரி வேறில்லாமையால் எது எதைவிட (1) அதிரித்தமோ அது அதைக்காட்டிலும் (2) பின்னம் என்கிற (3) விப்ரபத்திக்கு விரோதமாகையாலும், ஆகையால் சம்சய முதலானவைகளை விட்டு நீங்கின சிற்சத்தியே பிரமாண மென்பது நிச்சயம். அப்படியே ஆகமத்திற் சொல்லியிருக்கிறது.

சங்கை:—உம்முடைய மதத்திலும் ஆத்ம சிற்சத்தி பிரமாண மென்னுமிடத்தில் ஒன்றே பிரமாதாவும் பிரமேயமும் ஆகவேண்டுமென்கிற தோஷமுண்டென்னில்

உத்தரம்:-(4) வித்தை (5) ராக முதலானவையாலே (6) கலுஷிதையாய விஷயத்திற்கு (7) அபிமுகியான சிற்சத்தி பிரமாணமாகும். பிரமாதாவன்று. கலக்கப்படாமல் ஆத்ம அபிமுகியான சிற்சத்தி பிரமாணமாகும். பிரமாதாவன்று. கலக்கப்படாமல் ஆத்ம அபிமுகியான சிற்சத்தி பிரமாதாவேயாகும் பிரமாணமன்று. அப்படியே அந்த ஆகமத்தில் வசன மிருக்கின்றது. அவற்றுள் பிரத்தியக்ஷப் பிரமாணத்திற்கு இலக்கணங் கூறப்படுகின்றது.

நேரிட அறியும் பிரமை பிரத்தியக்ஷமாகும். அது நிருவிகற்பமென்றும், சவிகற்பமென்றும இரண்டு விதமாம். நிருவி

(1) அதிரித்தம்—மிகுதி.
(2) பின்னம்—வேறுபட்டது.
(3) விப்ரபத்தி—பலவித ஞானம்.
(4) வித்தை—அஞ்ஞானம்.
(5) ராகம்—ஆசை.
(6) கலுஷிதை—கெடுக்கப்படுதல்.
(7) அபிமுகி—எதிர்நோக்கிய முகமுடையது.

கற்பமாவது பேர் சாதி முதலானவைகளைக் கூட்டாமல் வஸ்து மாத்திரத்தைக் கிரகிக்கும் ஞானமாகும். சவிகற்பமாவது பேர் சாதி முதலானவைகளைக் கூட்டிவரும் (1) விசிட்ட ஞானமாகும் அப்படியே ஆகமவசனமிருக்கிறது.

அநதப்பிரத்தியக்ஷமும் வேறு பிரகாரத்தினாலே மூன்று விதமாகும். அவை இந்திரியப்பிரத்தியக்ஷம், மானதப் பிரத்தியக்ஷம், இந்திரியாந்தக்கரணங்களை யபேட்சியாத சித்பிரத்தியக்ஷம் என்பன. இப்படியே பௌஷ்கராதி ஆகமங்களிற்சொல்லியிருக்கின்றது.

அவற்றுள் சித்பிரத்தியக்ஷமாவது மலபந்தமில்லாத சித்சத்தியோடு ஆத்மாவுக்கு நித்திய சம்பந்தமிருப்பதால் அதனுலுண்டான ஆத்ம பிரத்தியக்ஷ ஞானமாகும். அப்படியே ஆகமவசனமிருக்கிறது.

மானதப் பிரத்தியக்ஷமாவது வெளியிந்திரியங்களினாலே காட்டப்பட்ட அர்த்தத்தை மனத்தினாலே அனுபவிப்பதாகும்.

இந்திரியப் பிரத்தியக்ஷமாவது மூடிக்கொண்டிருக்கும் மலத்தை நீக்கும் பொருட்டு இந்திரியங்களை அபேக்ஷிக்கும் சிற்சத்தியைக் கொண்டு இந்திரியங்களின் வழியாகப் பதார்த்தங்களை யறிவதாகும்..

சங்கை:—இந்திரியங்களின் வழியாகப் பதார்த்தங்களோடு சிற்சத்தி சம்பந்தப்படுவது பிரததியக்ஷமென்று சொல்லப்பட்டது. (2) சுவநிஷ்டையான அந்தச் சிற்சத்திக்கு விஷய நோக்கமின்மையால் ஒரு கருவியன்றி அதற்கு அர்த்த சம்பந்தமெப்படிக் கூடும்! என்னில் உண்மை:—

அது சுவநிஷ்டையாயிருந்த போதிலும் மலத்தின் (3) ஆவரணத்திற்குத் தக்கபடி கலையினாலே தோற்றி வித்தையினாலே

---

(1) விசிட்டம்—பூரணம்.
(2) சுவநிஷ்டை—தன்னைப்பற்றியது.
(3) ஆவரணம்—மறைப்பு.

விஷயத்தை நோக்கி ராகத்தினாலே அதில் பற்றி அந்தக் கரணம் வெளி யிந்திரியங்களின் வழியாக ஆத்ம போகத்தின் பொருட்டு வெளியாந்தத்தில் பிரவர்த்திக்கின்றது.

அல்லாமல் எதிரி சொன்ன வழியாக இந்திரியார்த்த (1) சம்யோக மாத்திரத்தினாலுண்டாகிய ஞானம் பிரத்தியக்ஷமாகமாட்டாது. சிற்சத்தியோகமில்லாத இந்திரியார்த்தயோகம் ஒன்றுஞ் செய்யமாட்டாதாகையால். அப்படியே சுவாயம்புவாதி ஆகம வசனமிருக்கின்றது.

அவ்விடத்து இந்திரியங்களுக்கும் பதார்த்தங்களுக்கும் சம்பந்தம் ஆறுவிதமாகும். அவையாவன:—சம்யோகம், சம்யுக்த சமவாயம், சம்யுக்த சமவேதசமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேஷண விசேஷியபாவம் என்று ஆறுவிதம்.

கண்ணாலே குடத்தையறியு மிடத்து சம்யோக சம்பந்தம். குடரூபத்தையறியுமிடத்துச் சம்யுக்த சமவாயசம்பந்தம். ரூபத் தன்மையையறியுமிடத்துச்சம்யுக்த சமவேதசமவாயசம்பந்தம். காதினாலே சப்தத்தை யறியுமிடத்து சமவாய சம்பந்தம். சப்தத்தன்மையை யறியுமிடத்து சமவேத சமவாய சம்பந்தம். அபாவத்தையறியுமிடத்து விசேஷண விசேஷிய பாவம்.

இனி அநுமானம் சொல்லப்படுகின்றது.

வியாப்தி நிச்சயத்தினாலே (2) பரோக்ஷமான அர்த்தத்தை அறிவது அநுமானம்.

பரோக்ஷார்த்தத்தை யறிவதென்னில் சத்தத்தில் அதிவியாப்திவரும். அதற்காக வியாப்தி நிச்சயத்தாலென்றது. இது மாத்திரஞ் சொல்லில் சம்சயத்திற்கும் பிற்பாடு வரும் பிரத்தியக்ஷத்தில் அதி வியாப்தி வரும். அதற்காகப் பரோக்ஷமென்றது.

[இன்னும் வரும்.]

---

1. சம்யோகம்—மிகச்சேர்தல்.
2. பரோக்ஷம்—புலப்படாத சுப்பிரத்தியக்ஷம்.